# ஞானசம்பந்தம்

மலர் 11]  நந்தனஞூ ஐப்பசிமீ 10—11—52.  [இதழ் 12



திருவாரூர்

நீலோத்பலாம்பிகை

ஆசிரியர் : நாகலிங்கத் தம்பிரான்.

தண்டபாணி தேசிகர்.

தருமபுர ஆதீன

## ஜன்மநக்ஷத்திரத் திருநாள்

தருமபுர ஆதீனம் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களின் மாத ஜன்மநக்ஷத்திர நாட்களில் திருப்பதிகம்பெற்ற சிவத்தலங்களில் ஆதீனச் சார்பில் அபிஷேக ஆராதனைகள் செய்வித்து அவ்வத்தலப் பதிகத்தையும் அச்சிட்டு வழங்கிவருதல்போல, இம்மாதத்திலும் 18—10—52 அன்று திருவேட்டக்குடி ஸ்ரீ திருமேனியழகர் ஆலயத்தில் அபிஷேக ஆராதனைகள் செய்வித்துத் தலப்பதிக வெளியீடும் வழங்கப்பெற்றது.

## ஏழைகளுக்கு அன்னதானம்

தருமபுர ஆதீன மடாலயத்தில் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் அவ்வப்போது குடிமக்களுக்கு முழுக எண்ணெய், அரப்பு ஆதியன அளித்து நீராடச்செய்து, மடாலய முகப்பில் தமது நேர் பார்வையிலேயே அன்னமளித்து, ஈத்துவக்கும் இன்பத்தைப் பெற்று வருகிறார்கள் என்பது யாவரும் அறிந்ததே. அம்முறையில் வழக்கம் போல் இந்த ஆண்டிலும் கந்தசஷ்டி ஆறு நாட்களிலும் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் உபவாசமிருந்து விரதமனுட்டித்து, கந்த சஷ்டி மறுநாள் விசேஷ அபிஷேக ஆராதனையுடன் பூஜை முடித்துப் பாரணைசெய்தருளினார்கள். காலை எட்டுமணிமுதல் நடுப்பகல்வரை ஆயிரத்தெட்டுக்கு மேற்பட்ட ஏழைகளுக்கு மடாலய முகப்பிலேயே அன்னம் வழங்கச்செய்தார்கள்.

## அன்பர்களுக்கு

"ஞானசம்பந்தம்" என்னும் இத் திங்கள் வெளியீடு இம்மாத (ஐப்பசி) இதழோடு பத்தாவது மலர் நிறைவுற்று, கார்த்திகை மாதத்தில் பதினோராவது மலர் தொடங்க இருக்கின்றது. வழக்கம்போல் அன்பர்கள் சந்தாத்தொகையினை முன்னரே அனுப்பித் தொடர்ந்து ஞானசம்பந்தம் பெற்றுப் பயன்பெறுவார்களாக.

செயலாளர்.

உ

குருபாதம்

# ஞானசம்பந்தம்

மலர் 11] நந்தன௵ ஐப்பசி௴ 10—11—52. [இதழ் 12

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய் பிஞ்ஞகா பிறப்பிலீ
கொன்றையம் முடியினய் கூடலால வாயிலாய்
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. —சம்பந்தர்.

## கலியுகத்திலும் கண்கண்ட கடவுள்

### மலிபுகழ் மாயூர நாதரே!

“தெய்வம் நின்று கொல்லும்; அரசன் அன்று கொல்லும்” என்பது பழைய பழமொழி. இந்தக் காலத்திலோ தெய்வங்கூட ஒரு புரட்சிகரமான மனப்பான்மையில் இறங்கி விட்டதென்னலாம். மனிதன் வெகு துணிவோடு எல்லாத் தீய காரியங்களையும் செய்கின்றான்; பயன் கண்ணுக்குத் தெரியாமலும், கருத்துக்கு விளங்காமலும் காலங்கழித்து வருவதால். அந்தநிலை மாறினால் ஒழிய உலகம் திருந்தாது என்பதை உள்ளத்தில் கொண்ட ஒரு பெருங் கடவுள் கை மேல் பலனைக் காலத்தோடு காட்டத் தொடங்கிவிட்டார். தம்முடைய 15-ம் வகுப்புப் படித்த பட்ட அறிவைத் துணையாகக் கொண்டு வாழும் தோழர்கள் சிலர் கூறலாம், தன்னுடைய சொத்தைக் காப்பாற்றிக்கொள்ளாத தெய்வமா உலகத்தைக் காப்பாற்றப் போகிறதென்று”. அவர்கள் வாய்ப்புக்கு ஓர் ஆப்பாக மாயூரநாதர் காட்டிவிட்டார்.

சுமார் பத்து அல்லது பன்னிரண்டு ஆண்டுகட்கு முன் சாமிச் சொத்தைத் திருடிச் சாமிக்குப் பலம் இருப்பதைக் காட்டி உலகத்தை உய்விக்கும் சிந்தை படைத்த தயாள குணமுள்ள திருடன் ஒருவன் அபயாம்பிகையின் மூக்கணியைத் திருட முயற்சித்தான். அம்மையின் அருகிலும் போய் விட்டான். மூக்கணி எடுக்க முடியவில்லை. இதோ பார்! என்று மூக்கை உடைக்கச் சுத்தியை ஓங்கினான். கண் சுழன்றது. அறிவு சுழன்றது. கை ஓங்கியபடியே காலைச் சந்திவரை நின்று கொண்டிருக்கின்றான். போலீசார் வந்து கைது செய்யும்வரை நின்று கொண்டிருந்தான். அதன் பிறகே அறிவு தெளிந்தது. ஐயோ பாவம்! அபயாம்பிகை திருடனுக்கு அபயம் கொடுக்காமல் காட்டிக் கொடுத்த தெய்வமாகி விட்டாள். காலத்திற்கேற்பக் கடவுளும் காட்டிக் கொடுக்கத் தலைப்பட்டுவிட்டார்கள். என்னசெய்வது!

திருவையாற்றுத் திருடனும் கூட்டத்தோடு பிடிபட்டுக் கூண்டில் இருக்கின்றான். இதையெல்லாம் பார்த்தாவது செம்மையுள்ளத்தோடு கடவுளை நம்பினோர் கைவிடப்படார்; கடவுளும் தன் சொத்தைக் கைவிடார் என்பதை உலகத்தில் தடுமாற்ற அறிவுள்ள சிலர் அறிந்து உய்வார்களாக.

---

## மூலர் உபதேசம்.

‘நாடும் நகரமும் நற்றிருக் கோயிலும்
தேடித் திரிந்து சிவபெரு மான்என்று
பாடுமின் பாடிப் பணிமின் பணிந்தபின்
கூடிய நெஞ்சத்துக் கோயிலாக் கொள்வனே’

# கல்கி ஆசிரியருக்கு எழுதிய கடிதம்

மடாதிபதியின் கண்டனம் என்ற தலைப்பின் கீழ், தங்கள் கல்கி பத்திரிக்கை 24—8—52 இதழில் எழுதியிருப்பது படிக்கப்பட்டது. கல்கிப் பத்திரிகை முன் வார இதழில் மடத்துக் கிராமங்களில் உழுது பயிரிடும் விவசாயிகளின் நியாயமான கோரிக்கைகளைப் பூர்த்தி செய்யாமல், கம்யூனிஸ்ட் பிரசாரத்துக்கும் நாஸ்திகப் பிரசாரத்துக்கும் மடத்துக் கிராமங்களில் இடந்தந்துவிட்டதாகத் தோற்றம் அளிக்கும்படி எழுதப்பட்டிருந்ததால், எந்தெந்த கிராமங்களில் என்னென்ன நியாயமான கோரிக்கைகள் வழங்கப்படவில்லை என்று சொல்ல வேண்டுமென்று கேட்கப்பட்டது. அதற்குப் பதில் தரப்படவில்லை. மடத்துக்குப் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் இருக்கின்றன என்றும், அனேக கிராமங்கள் உண்டு என்றும், அங்கே ஆயிரக்கணக்கில் உழவர் குடும்பங்கள் இருக்கிறார்கள் என்றும், மடாதிபதியால் அந்த விவசாயக் குடிகளின் நியாயமான கோரிக்கைகள் நிறைவேற்றப்படாது அங்கெல்லாம் கம்யூனிசம், நாஸ்திகப் பிரசாரத்துக்கு இடம் ஏற்பட்டிருப்பது போலவும், மடத்துக் கிராமங்களில் சமயப் பிரசாரம் செய்யத்தக்க சூழ்நிலை இல்லை என்பதாகவும் கற்பனை செய்துகொண்டு, அதனால் பிரசாரம் வேண்டியிராத சென்னைக்கு வந்து பிரசாரம் செய்யப்பட்டிருப்பது போலவும், பல தவறுகளை அடிப்படையாகக் கொண்டு எழுப்பிய கற்பனைக் கட்டிடம் எப்படி இருக்குமென்பதை வாசகர்கள் அறிந்துகொள்ள விட்டுவிடுகிறோம்.

விவசாயத்தில் ஈடுபட்டுள்ள குடிகளில் மடத்துக்குடிகளையும், மற்றக்குடிகளையும் ஒப்பிட்டுப்பார்த்தால் நிச்சயம் மடத்துக்குடிகள் ஓரளவு நல்ல நிலையில் ஆஸ்திக புத்தியுடன் இருப்பது பொதுநோக்கொடு திறந்தமனத்துடன் தெரிந்துகொள்ள விரும்புகிறவர்களுக்குத் தெரியவரும். தற்காலம் நடைபெறும் நாஸ்திகப்பிரசாரம், கம்யூனிஸ்ட் பிரசாரம் அவரவர்கள் செல்வாக்குப் பெறச் செய்யப்படும் பிரசாரமே.

அவைகளில் மக்களுக்கு இன்று, நம்பிக்கை உண்டாகும். நாளைக்கு மறையும். செல்வாக்குள்ள கட்சியிலிருப்பவர்களில் சிலர் குடிகளிடம் சென்று செய்யும் வீண் கிளர்ச்சியும், புரட்சிகர மனப்பான்மையுள்ள பிரசாரமும் உண்மையாகத் தான் இருக்கவேண்டும் என்று மக்களுக்குத் தோன்றி விடுகிறது. பெரும்பாலும் இப்படிப்பட்ட பிரசாரங்களால் தான் மக்கள் கேடுறுகின்றனர்.

நிலப்பிரிவினையைப் பற்றிய விஷயத்தில் எல்லாக் கட்சி களும் அனேகமாக ஒன்றுதான். நிலப்பங்கீடு செய்வது இப்போது சாத்தியமில்லை என்று அபிப்பிராயம் தெரிவிக்கத் தைரியம் உள்ள பேச்சாளர்கள் இப்போது கிராமங்களுக்குச் செல்வதில்லை. எந்த அரசியல் கட்சி அதிகாரத்துக்கு வந்தா லும் நிலப்பிரச்சினை சம்பந்தமாக மடங்களின் நிலைமை ஒரே மாதிரியானது தான்.

நியாயமான கோரிக்கைகள் உரிமைகள் என்னவென்று கேட்டது போலச் சொல்லி சில குறிக்கப்பட்டிருக்கின்றன. மேலே சொன்னபடி நாம் கேட்டவை கிராமவாசி நம்மால் புறக்கணிக்கப்பட்டதாகத் தெரிவிக்கும்படி சொல்லப்பட்ட நியாயமான கோரிக்கைகள் என்னென்ன என்பதே. என்ன காரணத்தாலோ அந்த விபரம் தரப்படவில்லை.

மடங்களின் நிலங்களில் பாடுபடும் உழவர்களுக்கு நியாய மாக அளிக்கப்பட வேண்டிய பொருளாதார உரிமைகள் என்று 5 கோரிக்கைகளைக் கல்கி ஆசிரியர் அவர்கள் குறிப்பிட் டிருக்கிறார்கள். (மடாதிபதிகள் இவைகளைவழங்க முடியுமா? என்று சற்றும் சிந்திக்காமல் எழுந்த சொல்சித்திரம் அது) சட்ட பூர்வமாக எந்த மடாதிபதியும் இந்தக் கோரிக்கைகளை வழங்கமுடியாதென்பது சாமான்யமானவர்களும் அறிந்ததே. மடங்களின் குடிகளே அறிவார்கள். (சர்வமும் அறிந்த கனம் கல்கி ஆசிரியர் அவர்களுக்கு எப்படி தெரியாமல் போயிற்று என்பது ஆச்சரியம்)

578

இப்போதுள்ள மடாதிபதி அவர்கள் பீடத்தமர்ந்த காலத்தில் இப்போது சொல்லப்படும் அந்தக் கோரிக்கைகளை வழங்கலாமா என்று யோசித்தார்கள். அவைகளை வழங்கு வதில் சட்டம் குறுக்கிடுவதாகப் புலப்பட்டதால் இந்தக் கோரிக்கைகள் வழங்கப்படாமல் நின்று போயின. இன்றும் இந்த 5 கோரிக்கைகளையும் வழங்க மடாதிபதியவர்கள் பூர்ண சம்மதத்துடன் இருக்கிறார்கள். ஆனால் சட்ட பூர்வமான தடைகள் நீங்க வேண்டும். மகாசந்நிதானத்தின் பரந்த மனப்பான்மை இதிலிருந்தாவது கல்கி ஆசிரியர் அவர்களுக்கு விளங்கட்டும். குடிகளின் கோரிக்கைகளைப் பற்றிச் சொல்லவந்த ஆசிரியர் அவர்கள் அக்குடிகளின் கடமைகளையும் சொல்லியிருக்கவேண்டும்.

வீண் கிளர்ச்சி மனப்பான்மை தம் எழுத்துக்களால் ஏற்படாது என்றும், அதற்கு வேறு கூட்டத்தார்கள் இருக் கிறார்கள் என்றும் சொல்லி, அவர்கள் சொல்வது என்ன என்றும், அவர்கள் சொல்கிறபடி நடந்தால் என்ன ஆகும் என்பதைக் கவனிக்கவேண்டும் என்றும், கல்கியில் சொல்லி யிருக்கிறது. இந்த இடத்தில் இது கல்கிப் பத்திரிகை எழுத்தா என்று ஆச்சரியப்படத்தக்கதாக இருக்கிறது.

கம்யூனிஸ்ட் பிரசாரம் கல்கியில் கண்டபடி அவர்கள் செய்கிறார்களோ? இல்லையோ? அவர்கள் பேப்பர்களில் அவ் விதம் எழுதுகிறார்களோ என்னவோ? கல்கி பத்திரிகையில் எழுதிக்காட்டிய கனம் ராஜாஜி அவர்கள் சில பத்திரிகைகளை வாசிக்கக்கூடாதென்று சொல்லி யிருக்கிறார்களே அப்படிப் பட்ட எண்ணம் உள்ளவர்களும் வாசிக்கும்படி நேரிட்டு விட்டது இந்த எழுத்து. கல்கி எழுத்து ஏன் இப்படி இறங்கவேண்டும்?

மேற்கண்டபடி கம்யூனிஸ்ட் பிரசாரம் என்னவென் பதை இவர்கள் பத்திரிகையில் வெளியிட்டது தவறு. அத்துடன் இல்லாது அதன்பேரில் விளக்கமாக வெகு மட்ட நிலையில் எழுதியது சந்தர்ப்பமில்லாத சந்தர்ப்பத்தில் இதர

679



மடங்களையும் அவதூறு செய்து, சந்திக்கு இழுப்பதாக ஆகிறது. இந்த நிலையில் கல்கி ஆசிரியர் அவர்கள் சிறிது சிந்தனை செய்து பார்க்கட்டும்.

கம்யூனிஸ்ட்கள் இன்று மடாதிபதிகளைப்பற்றி மட்டில் பேசவில்லை. நிச்சயம் இந்தக் கல்கியாருக்கும் விலக்கில்லை. சொந்தமாகச் சொத்துள்ளவர்கள் யாவருக்கும் இது பொருந்தும். மடாதிபதிக்கு இது நிச்சயம் பொருந்தாது; சிந்தித்தால் இது விளங்காமல் போகாது. கொண்டுவந்ததுமில்லை கொண்டுபோகப் போவதுமில்லை; வழியில் வந்தது போகிறபோது போகட்டும் என்று நினைப்பவர்கள் மடாதிபதிகள். கல்கியார் நினைக்கிறபடி கம்யூனிசத்திற்குப் பயப்படவேண்டியவர்கள் மடாதிபதிகள் அல்ல. சொத்தைச் சேர்க்க வேண்டும். சந்ததியார்களுக்குச் சேர்த்துவைக்க வேண்டும்; எப்படியாவது அதைச் சேர்த்துவைக்க வேண்டும் என்று நினைக்கிறார்களே அவர்கள்தான் கம்யூனிஸ்ட் பிரசாரத்துக்கு பயப்படவேண்டும். 'ஊருணி நீர்நிறைந்தற்றே பேர் அறிவாளன் திரு' என்ற பொய்யாமொழிக்கு மடங்கள் ஒரு ஸ்தாபனம் என்ற முறையில் உண்மையாகவே ஒரு எடுத்துக் காட்டு. சொத்து ஒரு இடத்தில் சேர்ந்திருப்பதால் ஏற்படும் கெடுதல் ஒன்றும் இங்கில்லை. அப்படிச் சேர்ந்திருப்பதால் ஏற்படக்கூடிய நன்மைகள் எல்லாம் இங்குண்டு. இந்தச் சொத்து அழிவதில்லை. சொத்தின் வருமானத்தைக் காலப் போக்கை அனுசரித்து நல்ல காரியங்களுக்குப் பயன்படக் கூடிய வகையில் அமைத்துள்ளார்கள்.

ஆதீனகர்த்தரவர்களின் கனம் தங்கிய மானேஜரவர்கள் ஆதீனத்தில் செய்யப்பட்டுவரும் பிரசார விஷயமாக ஏதோ தெரிவிக்கவேண்டும் என்று சொல்கிறார்கள் என்ற கிண்டல் பேச்சு ஒருவருக்கு மாத்திரம் சொந்தமானதல்ல. கல்கியில் பிரசுரிக்கப்பட்ட ஆதீனப் பிரசார சம்பந்தமாகச் சமீபத்தில் வெளியான அறிக்கைகளும் அனுப்பப்பட்டிருந்தன; கல்கியார் அவைகளைப் படித்திருக்கலாம். படிக்காவிடில் இப்பொழுதாவது படித்துப் பார்க்கட்டும். தம் கல்கி இதழ்களைப்

புரட்டிப்பார்த்துக் கொஞ்சம் ஞாபகப்படுத்திக் கொள்ளட்டும். 1943 கல்கி தீபாவளி மலர் பார்க்கட்டும். திருக்குறள் அறத்துப்பால் பற்றிய கல்கி 17—12—50 இதழைப் பார்க்கட்டும். கல்கி 26—1—51 குடியரசுமலரைப் பார்க்கட்டும். பிரசார விஷயமாக என்ன நடந்து வருகிறது என்பது கனம் தங்கிய கல்கியாரவர்கள் ஞாபகத்துக்கு வரும்.

நாஸ்திகப் பிரசாரமும் கம்யூனிஸ்ட் பிரசாரமும் பலன் இல்லாமல் செய்வதற்கு மடாதிபதிகள் என்ன முயற்சி எடுத்திருக்கிருர்கள் என்று கல்கியார் தெரிந்துகொள்ள விரும்புகிருர்கள். மடாதிபதிகளின் கடமைகளில் ஒன்று சமயப் பிரசாரமும் என்று சொல்லலாம். நாஸ்திகப் பிரசாரம் பயன் பெருமல் செய்ய ஒருவாறு முயற்சிக்கலாம். அந்தப்படி நடந்துவருவது கண்திறந்து பார்ப்பவர்களுக்குப் புலப்படும்.

அரசியல் துறையில் ஆதிக்கம் பெறவேண்டி கம்யூனிஸ்ட் பிரசாரமும் நாஸ்திகப் பிரசாரமும் பலதிறப்பட்ட வழிகளில் நடத்தப்பட்டு வருகின்றன. அந்தப் பிரசாரத்திஞல் நாஸ்திகம் பரவாமல் இருக்க, சமயத்துறையில் மடாதிபதிகள் அவசியமான பிரசாரம் செய்துவருகின்ருர்கள். அந்தக் கோஷ்டிகளின் மற்றத் துறைகளில் நடைபெறும் பிரசாரங்களைப் பற்றி, மற்றவர்கள் கவனிக்கவேண்டியதென்பது மடாதிபதிகளின் அபிப்பிராயம். மற்றும் பலருடைய அபிப்பிராயமும் அதுவே. கல்கியாரும் அதை ஒப்புக் கொள்வாரென்றே நினைக்கிருேம்.

5881

# கந்தபுராணத் திருநாளில் தலைமையுரை

சொல்லின்செல்வர், திரு. ரா. பி. சேதுப்பிள்ளை B.A., B.L.,

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்ப்பேராசிரியர்.

பெருமைசான்ற தருமையாதீனத்தில் இன்று நடைபெறுவது கந்தபுராணத் திருவிழா. இந்தக் குருபூசை விழாவில் நாள்தோறும் நல்ல பொருள்களை நறுந்தமிழில் கேட்டு இன்புறும் வாய்ப்பினை இந்நகரத்தார்க்கு அளித்த தருமை ஆதீன ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானத்தின் கருணையை மனமாரப் போற்றுகின்றேன்.

கந்தபுராணம் நமது சொந்தப்புராணம். தமிழ்நாட்டிலே கந்தப்பெருமான் வழிபாடு நினைப்பிற்கு எட்டாத நெடுங்காலமாக நடைபெறுகின்றது. தமிழ்நூல்களுள் மிகத் தொன்மை வாய்ந்த தொல்காப்பியத்தில் முருகப்பெருமான் "சேயோன்" என்று போற்றப்படுகின்றான். இன்னும் பழைய இசைப் பாடலாகிய பரிபாடல், பத்துப்பாட்டுள் தலையாய் நிற்கும் தகுதிவாய்ந்த திருமுருகாற்றுப்படை, செந்தமிழ்ப் பெருங் காப்பியமாகிய சிலப்பதிகாரம் முதலிய சிறந்த இலக்கியங்களிலெல்லாம் முருகன் பெருமை பேசப்படுகின்றது. 'வேள்' என்னும் அழகியதமிழ்ப்பெயர், முருகனுக்கு அமைந்த அருமையான பெயராகும். மாந்தர் கண்ணுக்கும் எண்ணுக்கும் அழகனாய், இனியனாய் அமைந்த செம்பொருளை 'வேள்' என்னும் சொல் உணர்த்துவதாகும்.

பழம்பெருமை வாய்ந்த காவிரிப்பூம்பட்டினத்தை அணி செய்த ஆலயங்களைக் கூறப்போந்த சிலப்பதிகார ஆசிரியராகிய இளங்கோவடிகள்,

"அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயில்"

என்று முருகப்பெருமான் கோயிலைக் குறிப்பிடுகின்றார். எனவே, செவ்வேள் என்பது முருகனுக்குரிய தொன்மை சான்ற பெயர்களுள் ஒன்றென்பது நன்கு விளங்குவதாகும்.

582

இத்தகைய சொல் முருகனுடைய மற்றைய பெயர்களோடும் இணைந்து வழங்குதலை இலக்கியத்தால் அறியலாம். முருகவேள் என்றும், கந்தவேள் என்றும், குமரவேள் என்றும், செவ்வேளாகிய சேயோனை ஆன்றோர் போற்றியுள்ளார். என்றும் குன்றாத இளநலம் வாய்ந்த அழகிய தெய்வமாகக் கந்தவேள் காட்சியளிக்கின்றார். இக்காட்சியைக் காணும்பேறு பெற்ற புலவர்பெருமானாகிய நக்கீரர்,

"..........என்றும்
இளையாய் அழகியாய் ஏறூர்ந்தான் ஏறே
உளையாய் என்உள்ளத் துறை"

என்று பாடிப்பரவினார். மலையாள நாட்டில் 'கோலப்பன்' என்று இன்றும் மாந்தர் வழிபடும் தெய்வம் முருகனே ஆகும். அழியாத – அழகுடைய தெய்வத்தைக் கோலப்பன் என்னும் சொல் குறிப்பதாகும். இச்சொல்லின் நீர்மை திருமுருகாற்றுப் படையிலும் விளங்குகின்றது.

"உன்னை ஒழிய ஒருவரையும் நம்புகிலேன்
பின்னை ஒருவரையான் பின்செல்லேன்—பன்னிருகைக்
கோலப்பா! வானோர் கொடியவினை தீர்த்தருளும்
வேலப்பா! செந்தி வாழ்வே"

என்று நக்கீரர் மனம் உருகிப் பாடுகின்றார்.

இவ்வாறு பேரழகும், பெருங்கருணைத் திறமும் வாய்ந்த முருகனை ஆறு படைவீடுகளில் அமைத்துச் சிறப்பாக வழிபட்டது செந்தமிழ்நாடு. அப்படைவீடுகள் யாவும் ஆன்றோரால் புகழ்ந்து பாடப்பட்டிருப்பினும் அவற்றுள் 'திருச்சீரலைவாய்' என்னும் திருச்செந்தூர் விதந்தெடுத்தோதப்படுகிறது. பொய்யறியாப் புலவராகிய நக்கீரர்,

"உலகம் புகழ்ந்த ஓங்குயர்விழுச்சீரலைவாய்"

என்று திருச்செந்தூரைப் போற்றினார். அலைவாயில் அமைந்த முருகன் கோயில் – உலகம் புகழும் கோயில் – ஓங்கி உயரும்

கோயில் – சீர்மை வாய்ந்த கோயில் என்று அவர் புகழும் திறம் ஊன்றி உணரத்தக்கதாகும்.

இந்தமுறையிலேயே சிலப்பதிகாரமும் செந்திலம்பதியின் சீர்மையை எடுத்துரைக்கின்றது.

> "சீர்கெழு செந்திலும் செங்கோடும் வெண்குன்றும்
> ஏரகமும் நீங்கா இறைவன்"

என்று பாடினார் இளங்கோவடிகள். இத்தகைய தனிச்சிறப் பிற்குக் காரணம் என்னை? தவச்செருக்காலும், படைச் செருக்காலும் இறுமாப்புற்ற சூரனை வென்று அறத்தினை நிலைநிறுத்தவந்த வேலவன் திருச்செந்தூரைப் படைவீடாகக் கொண்டான் என்று கந்தபுராணம் கூறுதலால் அப்படைவீடு இணையற்ற சீர்மை எய்திற்று என்று கருதுதல் தவறாகாது.

முருகன் பெயரால் அமைந்த ஊர்களும், பதிகளும் தமிழ் நாட்டில் பல உள்ளன. திருச்செந்தூருக்கு அருகே 'வேளூர்' என்னும் ஊர் ஒன்று உண்டு. அது முருகன் பெயர் தாங்கிய ஊராகும். இக்காலத்தில் 'வெள்ளூர்' என அப்பெயர் சிதைந்து வழங்குகின்றது. சோழநாட்டில் முருகனுக்குரிய சிறந்த தலமொன்று உள்ளது. மண்ணியாற்றங்கரையில் முருகன் ஈசனை வழிபட்டுப் பாசுபதாஸ்திரம் பெற்ற இடம் சேய்நல்லூர் என்னும் பெயர்பெற்றதென்று கந்தபுராணம் கூறும். இதுவே திருச்சேய்ஞலூர் என்னும் பாடல்பெற்ற தலமாக இக்காலத்தில் திருச்செங்கனூர் என வழங்குகின்றது. இவ்வாறே முருகன் பெருமையை நினைவூட்டும் பல ஊர்கள் தமிழகத்தில் உண்டு. பெருவேளூர், கீழ்வேளூர், புள்ளிருக்கு வேளூர் முதலிய வேளூர் எல்லாம் முருகன் பெயருடைய ஊர்களேயாகும். கீழ்வேளூர் என்பது கீவளூர் என இக் காலத்தில் மருவிவழங்குகின்றது. இத்தருமையாதீனத்தின் அருளாட்சியில் அமைந்த பாடல்பெற்ற புள்ளிருக்குவேளூர் இந்நாளில் வைத்தீஸ்வரன்கோயில் என வழங்குகின்றது. அப்பதியில் உள்ள முத்துக்குமரனைப் பாடினார் குமரகுருபர அடிகள். தமிழ்நாட்டின் பெருமையை வடநாட்டாரும்

584

அறிந்து வணங்கச்செய்த அருந்தவச்செல்வராகிய குமரகுருபர அடிகள் முத்துக்குமாரசுவாமியின்மீது பாடிய பிள்ளைத்தமிழ் சிவமணமும் தமிழ்மணமும் கமழும் சிறந்தபனுவலாகும்.

பத்துநாட்களாக இத்திருமடத்தில் நிகழும் திருநெறித் தமிழ்விழாவில் கந்தபுராணத்திற்கு ஒருநாள் அமைத்திருப்பது போலவே, கம்பராமாயணத்திற்கும் ஒருநாள் தந்திருப்பது போற்றுதற்குரியதாகும். கந்தபுராணத்திற்கும், கம்பராமாயணத்திற்கும் பலவகையான ஒற்றுமையுண்டு. கதைப்போக்கில் அசுரரை அழித்த முருகனுக்கும், அரக்கரை வென்ற இராமனுக்கும் ஒற்றுமையுண்டு. கந்தபுராணம் பாடிய கச்சியப்பர் வாக்கும், இராமாயணம் பாடிய கம்பர் வாக்கும் பல இடங்களில் ஒன்றுபட்டிருக்கக் காணலாம்.

முருகன் அழியாத அழகுடையவன் என்று கச்சியப்பர் கூறும்வண்ணமே, இராமனை அழியாத அழகுடையவன் என்று கம்பரும் கூறுகிறார். எனவே முருகனும் இராமனும் அழகின் திருவுருவம்; அருளின் திருக்கோலம்; முருகனுடைய வேலும், இராமனுடைய வில்லும் அறத்தின் சின்னங்கள். ஆதலால் கந்தபுராணம், கம்பராமாயணம் என்னும் இரு பெருங் காவியங்களையும் கண்ணெனப் போற்றுதல் கற்றோர் கடனாகும்.

---

**வீரவேல் தாரைவேல் விண்ணோர் சிறைமீட்ட**
**தீரவேல் செவ்வேள் திருக்கைவேல்—வாரி**
**குளித்தவேல் கொற்றவேல் சூர்மார்பும் குன்றும்**
**துளைத்தவேல் உண்டே துணை.**

---

குறிப்பு :— தருமபுர ஆதீனம் திருநெறிய தெய்வத் தமிழ் மாநாட்டில் 22—5—51 ல் நிகழ்த்திய பேருரையில் சில குறிப்புக்கள்.

585

# அறியாதார் அறியாதார்

திரு. தொ. மு. பாஸ்கரத்தொண்டமான் எம்.ஏ.,

அன்று ஒருநாள் நான் கோயிலுக்குப் போயிருந்தேன். கோயில் கவிச்சக்ரவர்த்தி **கம்பன்** பிறந்த ஊராகிய **திருவழுந்தூரில்** உள்ள **ஆமருவியப்பன்** கோயில்தான். நல்ல மாலை நேரம். உத்சவகாலம்வேறே ஆதலால் கோயிலுக்கு வருவார் தொகை அதிகமாகவே இருந்தது. ஒவ்வொருவரும் கையில் தேங்காய், பழம், புஷ்பம், கற்பூரம் எல்லாம் நிறைந்த தட்டுக்களை ஏந்திச் சென்றனர். புஷ்பக்கடையில் நுழைந்து அழகு அழகான மாலைகளைக் கட்டி வாங்கிக் கொண்டுபோனவர் பலர். அலங்காரப்பிரியன் அல்லவா பெருமாள். நானும் இவர்களுடன் சேர்ந்து தேங்காய், பழம், புஷ்பம் எல்லாம் வாங்கிக்கொண்டுதான் சென்றேன். என்னை அடுத்து ஒருவர் வந்து கொண்டிருந்தார். ஆனால் வீசிய கையும் வெறுங்கையுமாய்த்தான் வந்தார். அவரைப்பார்த்துக் கொண்டேதான் நடந்தேன் கோயிலுக்குள். இருவருமே பெருமாள் சந்நிதிக்கு வந்து சேர்ந்தோம். என்கையிலிருந்த தட்டை அர்ச்சகர் வாங்கிக்கொண்டார். பெருமாளின் திவ்ய ரூபத்தைக் கண்டவுடன், அவருடைய கம்பீரமான தோற்றத்தைப் பார்த்த உடன், நாராயணா! நாராயணா! என்று கைகூப்பித் தொழுதேன் நான். என்பக்கத்தில் வந்து நின்ற நண்பரோ கல்லுளிமங்கன் மாதிரி நின்று கொண்டிருந்தார். பெருமாளைத் தொழுவதற்குக்கூட அவர் கை எழக்காணோம். என்னாலே இதைத் தாங்கமுடியவில்லை. 'என்ன ஸ்வாமி! நீர் கோயிலை அறிவீர் ஆனால் கும்பிட அறியீரோ!' என்றேன். அவரும் 'ஆம் ஸ்வாமி! எனக்குக் கும்பிடத் தெரியவில்லையே' என்றார். என்ன திமிர் இவருக்கு என்று நினைத்து, 'ஆமா! நீரென்ன பெரிய மேதாவி என்ற எண்ணமா! கோயிலுக்கு வந்தால் ஏதாவது ஆராதனைப் பொருள் கொண்டுவரவேண்டும் என்று கூடவா தெரியாது' என்று கேட்டேன் நான் என் ஆத்திரம் தீர. 'தெரியும் ஸ்வாமி தெரியும் ஆராதனைக்குக் கொண்டு

வந்திருக்கிறேன் ஸ்வாமி ஒருபொருள், ஆம். கொண்டுவந் திருக்கிறேன்' என்று சொல்லிக்கொண்டே பாட ஆரம்பித்து விட்டார்.

"நாரா யணாய நம என்னும் நன்னெஞ்சர்
பாராளும் பாதம் பணிந்தேத்துமாறு அறியேன்
காராளும் மேனிக் கருணாகர மூர்த்திக்கு
ஆராதனை என் அறியாமை ஒன்றுமே"

என்று பாடிக்கொண்டே நின்றார். என்ன அற்புதமான காணிக்கை. தன்னுடைய **அறியாமையையே ஆராதனைப் பொருளாக அர்ப்பணிப்பது**. உண்மைதான் இப்படி தன் அறியாமையை அறிவிக்கிறாரே; இவர்தானே அறிவுடையார்; நாமெல்லாம் நமது அறியாமையை உணர்கின்றோமில்லையே; எல்லாம் தெரிந்தவர்களாக அல்லவா நினைக்கின்றோம்; நடிக் கிறோம்; நமக்கும் இவருக்கும் எவ்வளவு தூரம் என்று எண்ணிக்கொண்டே திரும்பினேன் அன்று வீட்டிற்கு.

இப்படிச் சிந்தித்துக்கொண்டே வந்நான் வீடு சேர்ந் ததும் கம்பனது ராமாயணத்தை எடுத்து ஒரு புரட்டு புரட்டி னேன். அங்கு ஒரு பாட்டு என்கண்ணில்பட்டது.

"பணியரங்கப் பெரும்பாயல் பரஞ்சுடரை யாம்காண
அணி அரங்கம் தந்தானை அறியாதார் அறியாதார்"

ஜனகனிடம் இராமனது குலமுறை கிளத்துவதற்குமுன் விஸ்வாமித்திரர் போடும்பீடிகை இது. உண்மைதான்! பக்தர் களது அறியாமைதான் எப்படி எப்படி எல்லாம் வெளிப்படு கிறது. இந்த அறியாமையைத் துடைக்கக் கம்பன் எப்படி உதவுகிறான். அப்படி உதவுகிறபொழுதெல்லாம் தான் எவ் வளவு அறியாமை உடையவன் என்று பணிவாய்த் தெரிவித் துக்கொள்கிறான். அப்படித் தெரிவித்துக்கொள்வதில்தான் எவ்வளவு அழகு. 'நான் அறியேன்; நான் அறியேன்' என்று சொல்லும்போது, இறைவனே நேரில் நம்முன்வந்து 'இவனை நம்பாதீர்கள்! இவன் அறியேன் அறியேன் என்று சொல்வ

587



தெல்லாம் பொய். இவனே எல்லாம் அறிந்தவன், அறிந்த வன்' என்றல்லவா கூறத்துவங்கிவிடுகிறுன். இவன் கூறு கிறதின் பொருளை உண்மைத்தத்துவங்களை அறியாதவர்களே அறியாதவர்கள். இவனை அறியாதவன் என்று சொல்ல முனைகிருர்களே அவர்களே அறிவிலிகள்.

எல்லாம்வல்ல இறைவனை **விராதன்** துதிக்கின்ருன். விராதன் துதிப்பதாகக் கம்பன் துதிக்கிருன்.

"வேதங்கள் அறைகின்ற உலகெங்கும் விரிந்தன உன்
பாதங்கள் இவை என்னில் படிவங்கள் எப்படியோ?"

என்று பாடுகிருன். மேலும்,

"ஓதங்கொள் கடலன்றி ஒன்றினேடு ஒன்றுஒவ்வா
பூதங்கள்தொறும் உறைந்தால் அவைஉன்னைப் பொறுக்குமோ?"

என்றும் ஐயுறுகிருன். ஆம்! பெரிய கேள்விக்குறி ஒன் றையே போடுகிருன்; இதற்கு விடையே அறியாதவன்போலக் கையையும் விரிக்கிருன்; மறுபடியும் ஆரம்பிக்கிருன்.

"தாய்தன்னை அறியாத கன்றில்லை; தன்கன்றை
ஆயும் அறியும்; உலகின்தாயாகி ஐய!
நீ அறிதி எப்பொருளும் அவைஉன்னை நிலை அறியா
மாயை இது என்கொல்லோ?"

என்று மீண்டும் தன் அறியாமையை வெளிப்படுத்துவதன் மூலம், அவனுடைய அறிவுடைமையையே அறிவிக்கிருன். இப்படியெல்லாம் பெரிய பெரிய உண்மைகளை எல்லாம் கேள்விக்குறிபோட்டே விளக்கமுயல்வது கம்பனுடைய தனி உரிமை அல்லதான். இறைவனை நினைந்து நினைந்து, உருகி உருகிப் பாடும் **அப்பர்பெருமானும்,**

"நின்னுவார் பிறர்இன்றி நீயே ஆனுய்
நினைப்பவர்கள் மனத்துக்கோர் வித்தும் ஆனுய்
மன்னுனுய் மன்னவர்க்கோர் அமுதம் ஆனுய்
மறைநான்கும் ஆனுய் ஆறங்கம் ஆனுய்
பொன்னுனுய் மணியானுய் போகம் ஆனுய்"

என்று எவ்வளவோ திட்டவட்டமாகத்தான் இறைவனைச் சுட்டிக்காட்ட முற்படுகிருர் என்ருலும் இறைவன் தன்மையை

588

நினைந்தவுடனே, அது என்ன அவ்வளவு எளிதாகச் சொல்லி விடக் கூடியதொன்று என்று மயங்குகிறார்.

"பூமிமேல் புகழத்தக்க பொருளே உன்னை
என்னானாய் என்னானாய் என்னின் அல்லால்
ஏழையேன் என்சொல்லி ஏத்துகேனே"

என்றுதான் அவரால் முடிக்கமுடிகிறது. ஆம்! **என்னானாய் என்னானாய்** என்று மயங்கி மயங்கிக் கூறுவதில் தான் எத்தனை அழகு, எவ்வளவு பெரிய உண்மை அடங்கிக் கிடக்கிறது. ஆம்! அறியேன் அறியேன் என்று இவர்கள் எல்லாம் தங்கள் தங்கள் அறியாமையையா வெளிப்படுத்துகிறார்கள். இல்லை; அந்த அறியாமைக்குள் அல்லவா அடங்கிக் கிடக்கிறது அவர்களது அறிவுடைமை. இதை அறியாதார் எல்லாம் அறியாதாரே!

கம்பன் போன்ற மகாகவி, அப்பர்போன்ற சிறந்த பக்தர்கள் பாடல்களை எல்லாம் பாடப்பாட நாம் அடைகிற இன்பங்கள் எத்தனை எத்தனையோ ஆம். கம்பன் கவிதையை அறிதோறும், அறிதோறும் நம் அறியாமையையே அறிகின்றோம். அவன் கவிநயமோ அன்று இருந்ததுபோல் இன்று இருப்பதில்லை. இன்னே இருப்பதுபோல் பின்னே இருப்பதில்லை. எப்படி எப்படி எல்லாமோ புதிய புதிய சுவையைத் தருகிறான். இதையெல்லாம் அறியாதார் அறியாதார் தானே!

கம்பன் கவிதையில் உள்ளம் பறிகொடுக்க அறியாதார் அறியாதாரே. அவன் சொல்லும் பா நயத்தின் பண்பையெல்லாம், காவியத்தின் கட்டுக்கோப்பை எல்லாம், அவன் சொல்லும் அரிய உண்மைகளை–பெரியதத்துவங்களை எல்லாம் அவன் கவிதை தரும் இனிமையை எல்லாம், எளிமையை எல்லாம் அறியாதார் அறியாதாரே!

---

**குறிப்பு:—** தருமபுர ஆதீனம் திருநெறிய தெய்வத் தமிழ் மாநாட்டில் **24—5—51** ல் கம்பராமாயணத் திருநாளில் **வழங்கிய கம்பரஸத்தின் சில துளிகள்.**

589

# பொய்யில் காட்சியோர் பொருளுரை

## உருக்கமும் உணர்வும்

வித்துவான், திரு. முத்து சு. மாணிக்கவாசக முதலியார்
தமிழ்ப்பேராசிரியர், பல்கலைக் கல்லூரி, தருமபுரம்.

உருக்கம் என்பது உருகு + அம் என்னும் இரண்டன் சேர்க்கையாகும். பெருகு, குறுகு முதலிய பகுதிகளும் அம் என்னும் விகுதியும் சேர்ந்து, பெருக்கம் குறுக்கம் என்றுள்ள சொற்களைப் போல்வது இவ்வுருக்கம் என்பது. நெருங்கு, சுருங்கு, அடங்கு, தொடங்கு, கலங்கு, விலங்கு என்பனவும் அவ்விகுதியுடன் புணர்ந்து, நெருக்கம், சுருக்கம், அடக்கம், தொடக்கம், கலக்கம், விலக்கம் என்ருகும். அவை உருக்கம், பெருக்கம், குறுக்கம் என்பவற்றின் வேருகிய நிலையன. இவை இருவகையும் பகுதியால் வேறுபடுதல் அறியலாம்.

உருக்கம் என்பது பலதிறப்படும். சூட்டால் தன்னிலை குளிர்ந்து நீர்மையடைந்து, குளிர்ச்சியால் தொன்னிலை அடைவது ஒன்று. பொன் முதலியன அதற்கு எடுத்துக் காட்டாகும். மற்ருென்று, உருகியது மீண்டும் இறுகாதொழிவது. தீயிலிட்ட படிகாரம் முதலியன உருகி ஒழிதல் கண்கூடு. தீக்கும் அப்படிகாரம் முதலியவற்றிற்கும் இடையில், அறவுருகித் தொலையாதவாறு தடுக்கும்பொருள் ஒன்றிருத்தல்வேண்டும். நெஞ்சுருக்கம் இவற்றின் வேருனது. உயிருருக்கம்போல்வது பிறிதொன்றில்லை.

உணர்வு இறையுணர்வு, உயிருணர்வு, உலகுணர்வு என்று முத்திறப்படும். பதிஞானம், பசுஞானம், பாசஞானம் என்பது சைவ சம்பிரதாயம். இங்கு உயிருணர்வு கெடுவதை உருக்கம் என்றும் இறையுணர்வு திகழ்வதை உணர்வு என்றும் நல்லோர் அறியத்தகும். உடலின் நின்று உள்ளும் வினை உயிர்க்கே உண்டு. அதனுல், உயிரை உள்ளம் என்றனர் உணர்வு (சாத்திர) நூல்வல்லோர். சிவஞானபோதம் முதலிய

வற்றுள் 'உள்ளம்' என்றது ஆன்மாவை உணர்த்துவதறிக. மனத்தை உள்ளம் எனல் உபசாரமேயாகும்

உள்ளம் உருகில் உடனுதலைத் திருவுந்தியார் திருக்களிற்றுப்படியார் முதலிய சாத்திரங்கள் தெளியவுணர்த்துகின்றன. திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார், திருவாய்மூர்த் திருப்பதிகத்துள், (8)

"பண்ணிற் பொலிந்த வீணையர்
பதினெண் கணமும் உணராநஞ்சு
உண்ணப் பொலிந்த மிடற்றினர்
உள்ளம் உருகில் உடனாவார்"

என்றருளிய செந்தமிழ்த்தொடரே திருவுந்தியாரில் ஒருகாலின்றி முதலில் நின்று,

"உள்ளம் உருகில் உடனாவர் (அல்லது
தெள்ள அரியர்என் றுந்தீபற
சிற்பரச் செல்வர்என் றுந்தீபற")

என நிலவுகின்றது.

"கலந்துருகி நைவார்தம் நெஞ்சினுள்ளே யானவன்" என்பதுபோன்ற பகுதியிற்கூறும் உருக்கம் இதனின் வேறானது. திருவுந்தியாருட் கூறியதையே, திருக்களிற்றுப் படியாரும்,

"உள்ள முதலனைத்தும் ஒன்ற ஒருவவரில்
உள்ளம் உருகவந் துன்னுடனும்—தெள்ளி
உணருமவர் தாங்கள் உளராக என்றும்
புணருமவன் இல்லாப் பொருள்"

என்று விரித்துரைத்து, அடுத்த திருப்பாட்டில், உள்ளம் உருகுதலாவது யாதென்னும் வினவிற்கு விடையிறுப்பாராய், நான் அழியும் என்று தெளித்தருளினார். தாம் தெள்ளினன்றிப் பிறர்க்குத் தெளித்தலரிதன்றோ? 'உளங்கொண்டு தெள்ளித்தெளிக்கும் பனுவற் புலவர்'க்கே எளிது. நானழிவு - ஜீவபோதமாய்வு. ஜீவபோதம் போகவும் சிவபோதம் பொருந்தவும் திருக்களிற்றுப்படியார் உணர்த்தும் வழி மூன்றாகும்.

591



அவை நல்ல சிவதன்மம், நல்ல சிவயோகம், நல்ல சிவஞானம் என்பன. இம்மூன்றிலும் நேரும் போலியைநீக்க நன்மை யெனும் அடை உளது. இத்திருவெண்பாவுள், உள்ளம் உருக லாவது வீடுபேற்றை அவாவும் தாம் உளராதல் ஒழிவது என்றும், தாம் உளராவரேல் தம்மொடு என்றும் அகலாது புணர்ந்துள்ள இறைவன் இல்லாதகல்வான் என்றும் பின்னீ ரடியால் விளக்கிய திறம் உணர்ந்து மகிழ்தற்பாலது. 'உளராக', 'இல்லா' என்ற உண்மையும் இன்மையும் ஒன்றற் கொன்று மறுதலையாதலும், ஜீவபோதம் உண்டேல் சிவ போதம் இல்லை ஜீவபோதம் இன்றேல் சிவபோதம் உண்டு என்னும் வாய்மையும், உள்ளம் உருகுதல் ஜீவபோத நீக்க மும், வந்துடனுதல் சிவபோதப்பேறும் ஆகும் தன்னிகரில் லாச் சித்தியும் ஈண்டுணரக்கிடக்கின்றன.

மெய்யுணர்வால் ஒழியத்தக்கது பொய்யுணர்வு. சிவ போதத்தால் ஒழியத்தக்கது ஜீவபோதம். கதிரவன் தோன்றக் காரிருளொழிதல் முன்பின் நிகழ்தலன்று. அதுபோலச் சிவ போதம் பொருந்த ஜீவபோதம் பொன்றுதலும் முன்பின் நிகழ்தலன்று, உள்ளம் உருகுதலும் உணர்வு வருதலும் ஒருசேர நிகழ்வனவேயாம், பொய்யுணர்வு போனபின்னே தான் மெய்யுணர்வு விளையும் என்பது பொருந்தாது. சிவபக்தி மிக்கவர்க்குச் சாத்திரஞானம் இல்லாதொழியினும் மனம் உருகும். திருவருள் சிறிதும் பெரிதுமான அளவில் எய்தும். அச்சிவபக்தி ஞானத்தைப்போலச் சிறந்ததே. அதனை, 'அன்புடையை ஆயின் செறிந்தொழிவாய் ஏதேனும் செய்' என்ற திருக்களிற்றுப்படிப் பகுதியில், அன்புடைமையை அறிவுடைமைக்கொப்பாக வைத்து வீடுபேற்றைப் பயக்க வல்லதென்ற உண்மையால் அறியலாம்.

எவ்வாறேனும் உருக்கம் அடையாதார்க்கு உணர்வு (சிவஞானம்) எய்துவது அரிது, அரிது அரிது. யோசனை போய்ப் பூக்களைக் கொண்டுவந்து தூவி வழிபட்டாலும், தோத்திரம் பல பாடினுலும் அவற்றோடு ஞானத்தாலோ பக்தி யாலோ உருக்கம் எய்தினலன்றி மெய்யுணர்வு தோன்றாது.

 592

வீடுபேறு வாய்க்காது. இதனைத் திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள், "கள்ளார்செங் கமலத்தான் கடற்கிடந்தான் என இவர்கள் ஒள்ளாண்மை கொளற்கோடி உயர்ந்தாழ்ந்தும் உணர்வறியான்" என்று சிவபெருமானை உணர்வதரிதென் பதை வரலாற்றின் வைத்துக்காட்டியதோடு, "வெள்ளானை தவஞ்செய்யும் மேதகுவெண் காட்டான் என்று உள்ளாடி உருகாதார் உணர்வுடைமை உணரோமே" என்று, உணர் வரிய சிவபெருமானை உணர்வதற்கு உருக்கம் இன்றியமை யாதது என்னும் ஞானசாத்திர வாய்மையையும், அவ் வுருக்கம் எய்தாதவர்க்கு மெய்யுணர்வுவாய்த்தல் இன்றென் பதையும், உருக்கமில்லார் உணர்வுடைமையைத் தாம் மதிப்பதில்லை என்ற தமது மெய்யநுபவத்தையும் நன்கு உணர்த்தியருளினார்கள்.

இவ்வுருக்கம் உணர்வுக்கு இன்றியமையாதது என்னும் உண்மையை, நம் தருமையாதீனத்து முதற்குரவர் குருஞான சம்பந்தர் அருளிய சிவபோகசாரத்துள்ளும்,

"உள்ளங் கரைய உடல்கரைய ஆநந்த
வெள்ளங் கரைபுரண்டு மேலாகக்—கள்ளமலம்
பொய்யாக என்னுட் புகுந்தவா றென்கொலோ
ஐயா தியாக விநோதா." (44)

என்பதில், உருக்கம், பசுபாசம் இரண்டிலும் வேண்டுமென் பாராய், 'உள்ளம் கரைய', 'உடல்கரைய' என்றருளியும், உணர்வு இன்னது என்பாராய், 'ஆநந்தவெள்ளம் கரை புரண்டு மேலாக' என்றருளியும், இவ்வுருக்கமும் உணர்வும் முறையே மலநீக்கமும் சிவப்பேறுமாதலை உணர்த்துவாராய், "கள்ளமலம் பொய்யாக என்னுட்புகுந்தவாறு என்கொலோ" என்றருளியும், இவ்விளைவு ஆண்டவன் சொக்கலிங்கத்தின் அருட்கொடைவிநோதம் என்பாராய், "ஐயா தியாகவிநோதா" என்றருளியும் வைத்த திறம், மெய்யுணர்வினார்க்கே பெரு விருந்தாகும்.

உருக்கம் வருந்திறம் எது? உணர்வு எது? இவ்விரு வினாக்கள் சிற்றறிவினார்க்கும் எளிதின் எழும். எழினும்

பேறறிவினரும் விடையிறுத்தல் மிக அரிது. உணர்வு எது என்பதை விளங்க உணர விரும்புவோர், வடமொழியிலே உள்ள கலைக்கடலுள் மூழ்கித்திளைத்து, அக்கடலின் நிலை கண்டுணர்ந்தாராயினும், தமிழிலுள்ள மெய்கண்ட சாத்திரப் பொருளாராய்ச்சியும் அநுபூதியும் உற்றாலன்றி, எண்ணம் ஈடேறப்பெறார் என்பது முக்காலும் சத்தியம். இவ்வுண்மை சிவஞானபாடியத்தின் சிறப்புப் பாயிரத்து விரிவுரையாலறியலாம். சைவசித்தாந்த உண்மையைத் தமிழிற் பெறலாம்படி வேறு எம்மொழியிலும் பெறலரிது. இவ்வெழுத்துப்பொய் போலும் என்றெண்ணுவோரும் உண்மை உபதேசத்தால் அறிந்த அநுபவத்தால் மெய்யே எனத் தோள்கொட்டி ஆர்ப்பர். தமிழிலுள்ள சைவசித்தாந்த சாத்திரங்கள் அநுபவ ஞானவாய்மையைத் தெளிவாக்கும் வண்ணம் அருளப்பட்டவை. பிறவெல்லாம் மறைத்துணர்த்துந் திறத்தவாயுள. இதனால் அடியேனுக்குப் பாஷா துவேஷம் உண்டு என்று கருதலாகாது. அஃதில்லை என்பதை அடியேனை அறிந்தோர் பலரும் உணர்வர். தமிழ்நூல்கள் காலத்தாற் பிற்பட்டன ஆதலின், வடமொழிச் சிவாகமங்களால் வெளிப்படுத்தப்பெறாத அநேகரகசியங்களைத் தெளிவிக்கின்றன என்பதே உண்மைக் கருத்து, இது நிற்க,

உருக்கம் எய்தவும் உணர்வுறவும் வேதாகமங்கள் கூறும் வழிகள் பலவும் அவரவர் பக்குவத்திற்கு ஏற்ப இன்றியமையாதனவேயாகும். ஆயினும், அவ்வழிகட்குத் தலையாயது ஒன்றே. அஃது யாது? அது விளங்குமிடம்,

"ஏதேது செய்தாலும் ஏதேது சொன்னாலும்
ஏதேது சிந்தித் திருந்தாலும்—மாதேவா
நின்செயலே என்று நினதருளா லேஉணரில்
என்செயலே காண்கிலேனே" (45)

என்ற சாரமாகும். இதனுள் செயலும் மொழியும் கருத்தும் இறைவனுடையனவாயின் உள்ளம் (ஜீவன்) என்ற ஒன்று யாண்டிருக்கும்? உருகியதன்றோ உள்ளம்? உற்றதன்றோ உணர்வு? 'உணரில் காண்கிலேனே' என்றதில்

594

காணப்படாதது ஜீவபோதம். உணர்வு சிவபோதம். இந்த ரகசியம் நூலறிவால் எய்துமோ? அந்நூற்கும் மேலறிவாலன்றோ எய்தற்பாலது? அம்மேலறிவுதான் சிவஞானம். அதை வழிபட்டால்தான் வந்துதவும்.

"முருகன்குமரன்குகன் என்றுமொழிந்
துருகுஞ்செயல் தந்துணர் வென்றருள்வாய்
பொருபுங்கவ ரும்புவி யும்பரவும்
குருபுங்கவ எண்குண பஞ்சரனே"

என்பதில் அருணகிரிநாதர், உணர்வு தந்தருள்வதன்முன் உருகுஞ் செயலைத்தரும் வண்ணம் ஆண்டவனை வேண்டியறிதலாலும் இவ்வுருக்கத்திற்கும் உணர்விற்கும் உள்ள தொடர்பு விளங்கும். உருகுதற்கு எளிய வழியாகிய தோத்திரத்தை இங்கு உணர்த்தியிருத்தல் காண்க.

வரகவி மார்க்கசகாய தேவரும் தாம் அருளிய திருவிரிஞ்சை முருகன் பிள்ளைத் தமிழில், "உருகாமனமும், சிவஞானம் உணரா அறிவும், உனது புகழ் ஓதா நாவும், ஓதக்கேட்டு உவந்தே இனிய நதிபோலப் பெருகாவிழியும் உடையேன்" என்றதில், சிவஞானவுணர்ச்சிக்குப் பக்தி மார்க்கத்தில் இன்றியமையாததான மனவுருக்கத்தை முதற்படியாக் குறித்திருத்தல் ஈங்கு நினைக்கத் தக்கது.

---

தருமபுர ஆதீன வெளியீடு.

"திருக்குறள் - உரைவளம்" பொருட்பால்

கிரௌன் 1 x 4 சைஸ் 1128 பக்கங்கள்.

காலிகோ கட்டிடம் விலை ரூ. 13—8—0
தபாற்செலவு வகையரு ரூ. 1—8—0

அறத்துப்பால் கைவசம் இல்லை.

கிடைக்குமிடம் :- மானேஜர்,
தருமபுர ஆதீனம்,
தருமபுரம், மாயூரம் P. O.

595

# தொனிப்பொருளும் தொல்காப்பியமும்

வித்வான், பிர்மஸ்ரீ K. S. விசுவநாத சாஸ்திரிகள் P.O.L.,
S. V. O. கல்லூரி, திருப்பதி.

(சென்ற இதழ் தொடர்ச்சி)

## 4. சிறந்ததொரு குறிப்புப் பொருளே தொனி எனப்பெறுவது.

எனவே இப்பொருளியலுட் கூறப்பெறுவன செய்யுட்குச் சிறப்பளிக்கின்ற குறிப்புப் பொருள்களே என்ற முடிவிற்கு வரவேண்டியதாகின்றது. அக் குறிப்புகளின் தரத்தை நோக்கும்போது அவைகளே தொனி இயல்பு உடையன வாகவும் அமைகின்றன.

[1] 'கைகவியாச் சென்று கண்புதையாக் குறுகிப்
பிடிக்கை யன்ன பின்னகந் தீண்டித்
தொடிக்கை தைவரத் தோய்ந் தன்றுகொல்லோ
அந்தீங் கிளவிக் குறுமகள்
மென்றோள் பெறனசை இச் சென்றவென் னெஞ்சே.'

என்னும் அகப்பாட்டுப் பகுதியை 'நோயுமின்பமும்.' என்ற சூத்திர வுரையுள் எடுத்துக்காட்டி 'உறுப்புடையது போல் உவந்து உரைத்தது' என்பர் நச்சினர்க்கினியர். கைகவித்துச் செல்லுதல் முதலியன நெஞ்சிற்குப் பொருந்துவன வல்ல வாயினும் தலைவன் தன் காதன் மிகுதி காரணமாகத் தன் நெஞ்சையும் வடிவுடைப் பொருள்போல வைத்துப் பேசுகிருன். தலைவியின்பால் தான்புரியக் கருதுகின்ற இன்ப விளையாட்டுச்செயலை அந்நெஞ்சிற்கும் உரியதாக்குகின்ருன் உவகை மிகுதியால். இக்கூற்றும் அத்தலைவனது உவகை மிகுதியைப் புலப்படுத்துகின்ற சிறப்புக் கருதியே அமைத்துக் கொள்ளப் பெறுவதும் ஆயிற்று. இது தலைவனது காதன் மிகுதியையும் அதன் வாயிலாக அவனது உள்ள விரைவையும் தோற்றுவித்து அதற்கே முதன்மையும் அளித்துக் கொண்டிருப்

1. அகம். 9 : 21. 6.

 596

பதனுல் இக்குறிப்பும் தொனித்தன்மை வாய்ந்ததே. இதனை மெய்ப்பாட்டுத் தொனி எனலாம்.

இஃதன்றியும் 'வினை முற்றி மீண்ட தலைமகன் தேர்ப் பாகன் கேட்பச் சொல்லியது' என்று குறிக்கின்றது அக நானூற்றுக் குறிப்பு. அதன்படியே நோக்குவோமானுல் தேர்ப்பாகனுக்குக் கூறுவதாய செய்தி பாட்டிலிருந்து வெளிப் படையாகக் காணப்படவில்லை. அஃதும் குறிப்பு வகை யிலேயே பெறுதல் வேண்டும். நெஞ்சம் இவ்வாறு விரை கின்றமையை உணர்த்தி அதற் கேற்பத் தேர்ப்பாகனும் தேரை விரைவிற் செலுத்த வேண்டுமென்று தலைவன் பாகனுக்கு உணர்த்துவதும் குறிப்பே. முதன்மையும் அதற்கே ஆதலின் இக்குறிப்பும் தொனித் தன்மை யுடையதே. இன்னும்,

[1] 'நல்லவரை நாட நீவரின்
மெல்லிய லோருந் தான் வாழலளே.'

என்ற இவ்வகப்பகுதியைத் தந்து 'பொழுது மாறும்' என்ற சூத்திர உரையுள் 'இது இரவும் பகலும் வாரல் என்றது' எனப்படுகின்றது. இது தோழி கூற்று. இதற்கு முன் பகலில் வர வேண்டாம் என்று பகற்குறி மறுத்தாள். இப் பொழுது இரவிலும் வரவேண்டாம் என்று இரவுக் குறியும் மறுக்கின்ற வாய்ப்பாட்டால் வரைவு கடாவுகின்ருள் பாங்கி. 'எங்கள் அன்னை கண்ணினுங் கடுங் காதலள். தந்தையோ அடி சிவப்ப நடப்பதும பொருஅகி 'சீறடி சிவப்பக் குறு மகளே எங்கே செல்கின்ருய்? எதற்காகச் செல்கின்ருய்?' என்கின்ருன். யாமோ நட்பினுல் இருதலைப் புள்ளின் ஓருயி ரினேம். இங்ஙனமாகவும் நல்வரை நாட நீவரின் மெல்லியல் வாழலள், என்று தலைவனது வருகையை விலக்குகின்ருள். நீவரின் எனவே வாரல் என்றதாயிற்று. இவ்விலக்கும் அவனது வருகையை விலக்குவதிலேயே நோக்குடையதன்று. வரைவொடு வருக என்பதே குறிப்பு. இதனுலேயே வாரல்

---

1. அகம். 12; 13. 4.

597



என்றலும் வரைதல் வேட்கைப் பொருளதாயிற்று. இங்கு குறிப்புப் பொருளே முதன்மையும் பெறுவதாகின்றதாதலின் இஃதுந் தொனித்தன்மை வாய்ந்ததே யாகின்றது.

## 5. தொனிநூலும் தொல்காப்பியமும்.

காவியத்தின் உயிரெனத் தருவதாய காவியப் பொருள் கூறப்படுவதும் உணர்த்தப் படுவதுமாக இருவகைப்படும் என்றும், உறுப்புக்களின் வேருக மாதர்க்கு அழகு என்று ஒன்று தனியே அமைவது போல உணரப் பெறுவதாய குறிப்புப் பொருளும் தொனி எனத் தனியே காவியத்தின் அழகாக அமைகின்றது என்றும், புலவரது புலமைத் திறத்தை விளக்குவதும் அஃதே என்றும். சொற்பொருள் உணர்வினல் மட்டும் அது கண்டறிய இயலாதது என்றும், தொனி ஆற்றலுள்ள சொற்களையும் பொருள்களையுமே புகழ் பெற விரும்பும் புலவன் தேர்ந்து கொள்ள வேண்டும் என்றும், தொனி பயக்குஞ் சொற்களையும் பொருளையும் நாடிக் கொள்வது வெளிச்சம் வேண்டியவன் விளக்கை நாடிக்கொள்வதை ஒத்ததே என்றும், சொற் பொருள் வாயிலாகச் சொற்ருெடர்ப் பொருள் காண்பது போலவே செஞ்சொல் வாயிலாகவும் செம்பொருள் வாயிலாகவும் உணரத்தகுவ தொன்றைக் காண்பதும் என்றும், சொற் பொருள் உணர்வின் வழியாகவே சொற்ருெடர்ப் பொருள் காணப் பெறுவதாயினும் சொற்ருெடர்ப் பொருட் காட்சியில் சொற்பொருள் தனித்து நிற்பதில்லை என்றும், இதே விதமாகச் செஞ்சொல்லும் செம்பொருளும் புலமை யுள்ளத்தில் தனித்து நில்லாமல் அவற்றல் உணரப் பெறுவதான குறிப்புப் பொருளே சிறந்து விளங்கும் என்றும், இவ்விதம் உணரப் பெறுவ தொன்றற்கே தலைமையை அளித்து, கூறப் பெறுகின்ற சொல்லும் பொருளும் தலைமை ஒழிந்து, அதற்கே உபகாரப்படுவதாகுமானல் அத்தகைய காவியமே தொனிகாவியம் எனப் பெறும் என்றும், தொனிச்சிறப்பு அமைந்த காவியமே தலைசிறந்த காவியம் என்றும், இவ்வாறு காவியத்திற்குச் சிறப்பு அளிக்கின்ற தொனியே காவியத்தின்

598

உயிர் என்றும், அஃதே காவியத்தின் அழகு என்றும் தொனியின் சிறப்பைத் தொனிநூல் விரித்துச் சொல்கின்றது. இத்தொனியைப் பாகுபாடு செய்கின்ற விடத்துப் பொருள், சுவை, அணி என்ற அடிப்படையில் பொருட்டொனி சுவைத் தொனி, அணித்தொனி என மூன்றுகப் பகுக்கின்றது. இத் தொனிப் பாகுபாட்டின் விளக்கத்தைத்* 'தொனிப்பாகுபாடு' என்னுங் கட்டுரையுட்காண்க.

இத் தொனி இயல்பு பலவற்றையும் விளக்குவதாய தனிநூல் தொனி நூல். இது காவியர் தலைசிறந்து விளங்கு வதற்குரிய நற்பண்புகளையே விரித்துரைக்கின்றது எனலாம். இவ்விதமே காவியம் என்பதற்குரிய நல்லிசைப் புலவர்களின் செய்யுள்கள் சிறத்தற்கு வேண்டும் நல்லியல்புகளை நவில் கின்றது தொல்காப்பியம். இவ்விரு நூல்களின் அடிப்படை ஒற்றுமை இங்கே ஆராயப்படுகின்றது. தொனிச் சிறப் பமைந்த காவியமே தலைசிறந்த காவியம் என்ற முடிபு இவ்விரு நூலுக்கும் ஒத்ததேயாம். இவ்வுண்மை உணர்த்தும் வகைமட்டும் மாறுபடுகின்றது. தொனியே காவியத்தின் உயிர் என்ற முறையில் இவ்வுண்மையை வற்புறுத்துகின்றது தொனிநூல். தொல்காப்பியமோ செய்யுளுறுப்புக்களை அமைக்கும் வகையில் இவ்வுண்மையைப் பெறவைக்கின்றது. இத்துணையே வேறுபாடு.

## 6. தொனிநூற் கொள்கையும் தொல்காப்பியச் செய்யுள் இலக்கணமும் ஒத்த பயன் அளிப்பதே.

காவியம் என்பது பொருளமைந்த சொல் வடிவினது. அது அழகுடையதாகிச் சிறத்தல் வேண்டும். அது அவ்வாறு சிறத்தற்கு வேண்டும் அழகை அளிப்பது எது என்று நாட முற்பட்டார் சிலர். அவர்களுட் சிலர் காவிய நடை அழ களிப்பதென்று கருதி நடையே காவியத்தின் உயிரென்றுர். மற்றுஞ் சிலர் அணி முதலியவற்றையும் அவ்வாறு கருதினுர்.

---

* S. V. O. I. Vol. VI. No. 2.

599



இங்கிலையில் தொனியே ஒப்பற்ற ஒப்பனையாவதை அறிந்த தொனி நூலார் தொனியே காவியத்தின் உயிரென்ருர். தொனியே காவியத்திற்கு ஒப்பற்ற அழகாயமைவது என்பது இதன் கருத்தாம். தொல்காப்பியமோ தொனியே காவியத்தின் உயிர் என்று கூருவிடினும் தொனியே காவியத்திற்கு ஒப்பற்ற அழகாயமைவது என்ற கருத்துமட்டும் பெறக் கூடிய வகையிலேயே செய்யுளிலக்கணத்தை அமைத்திருக்கின்றது. தொல்காப்பியம் செய்யுளுறுப்பென்று வகுத்திருக்கின்ற அவ்வுறுப்புக்கள் குறைவின்றி அமைந்திருக்குமாளுல் அவற்ருல் அமைகின்ற அச்செய்யுளும் அழகற்ற வடிவாக அமைய வியலாது. அங்ஙன மிருந்தும் எழுத்து, அசை முதலாய ஒரு சிலவற்றையே உறுப்பாகக் கொண்டு செய்யுட் படிவத்தை மட்டும் அமைத்துச் செல்வதோ, இவ்வளவிலும் நில்லாது திணை, துறை முதலியவற்றை அகப்பாட்டுறுப்பு என்று கூறுவதோ தக்கதன்று. திணை முதலாயவற்றை அகப்பாட்டுறுப்பு என்று கூறிஞல் புறப்பாடிற்கு இவ்வுறுப்புக்கள் வேண்டாவோ என்ற விஞவும் எழுகின்றது. இதன் மேலும் செய்யுட்கு அழகு செய்ய அணிநூலும் தனியே தேவை யாகியது. இவ்வாறு அணிநூல் செய்வாரைப் பேராசிரியர் வன்மையாக மறுக்கின்றனர். அதுவருமாறு:—

[1] "இனி இவ்வோத்தினிற் கூறுகின்ற உவமங்களுட் சில வற்றையுஞ் சொல்லதிகாரத்திஞள்ளுஞ் செய்யுளியலுள்ளும் சொல்லுகின்றன சில பொருள்களையும் வாங்கிக்கொண்டு, மற்று அவை செய்யுட்கண்ணே அணியாமென இக்காலத்தாசிரியர் நூல் செய்தாரும் உளர். அவை ஒரு தலையாகச் செய்யுட்கு அணியென்று இலக்கணங் கூறப்படா. என்னை? வல்லார் செய்யின் அணியாகியும் அல்லார் செய்யின் அணி அன்ருகியும் வரும். தாங்காட்டிய இலக்கணத்திற் சிதையா வழியும் என்பது" என்று விளக்கிச் செல்கிருர் பேராசிரியர். அவ்விளக்கத்தை ஆண்டு நோக்கி உணர்க. இவ்வனைத்தையும் ஒருங்கே நோக்குமிடத்து இக்குறைபாடனைத்தும், நிறைவுடையதொரு முழு நூலைத் தனித் தனியே வேறு வேறு

1. தொல். உவம. 37. பேரா. உரை.

பகுதியாக்கிப் பல நூல்களைச் செய்ய முற்பட்டதன் விளைவே எனலாம். இதனால் தொல்காப்பியத்தின் கட்டுக் கோப்பும் குலைந்தது. செய்யுளிலக்கணத்துள் சிறந்த பகுதியில் வளர்ச்சியும் குன்றியது.

## 7. தொல்காப்பியச் செய்யுளிலக்கணம்.

தொல்காப்பியச் செய்யுளில் முதற் சூத்திரத்துள் நல்லிசைப் புலவர் செய்யுட்கு வேண்டும் உறுப்புக்கள் பலவற்றையும் கூறி வைத்திருக்கின்றது; மாத்திரை முதலாகச் சில உறுப்புக்கள் செய்யுள் வடிவத்தைச் சீர்பெற அமைக்கின்றன. அவை:—

[1] 'மாத்திரை எழுத்தியல் அசைவகை யெனாஅ
யாத்த சீரே அடியாப் பெனாஅ
மரபே தூக்கே தொடைவகை யெனாஅ
நோக்கே பாவே அளவியல்வகை யெனாஅ'

என மாத்திரை முதலாக அளவியல் ஈறாக வருவன. இவ்வுறுப்புக்களால் அமைக்கப் பெறுகின்ற செய்யுள் வடிவு சிறந்த பொருளுடைய வடிவாகவே அமைந்திருக்க இயலும். செய்யுளடிதோறும் குறித்த பொருளை முடிய நாட்டுவது **யாப்பு** என்ற உறுப்பு. அறமுதலாகிய மும்முதற் பொருட்கும் உரிய வாகியது **பா** வென்னும் உறுப்பு. இவ்வுறுப்புடன் தோன்றுகின்ற செய்யுள் பொருளமைந்த சிறந்த சொல் வடிவினதாகவே அமையும். இவ்வாறு அமைகின்ற செய்யுள், அறிவிற்கு விருந்தாகி இன்பம் பயத்தல் கருதித் திணை முதலாகிய உறுப்புக்களும் உடையதாதல் வேண்டும். அவை:—

[2] 'திணையே கைகோள் கூற்றுவகை யெனாஅ
கேட்போர் களனே காலவகை யெனாஅ
பயனே மெய்ப்பா டெச்சவகை யெனாஅ
முன்னம் பொருளே துறைவகை யெனாஅ
மாட்டே வண்ணமோ டியாப்பியல் வகையின்
ஆறு தலையிட்ட வந்நா லைந்தும்.'

---

1, 2. தொல். செய்யுளில். 1.

என மாத்திரை முதல், வண்ணம் ஈருக இருபத்தாறு உறுப்புக்கள் கணக்கிடப் படுகின்றன. இவற்றுள் மெய்ப்பாடு, எச்சம் என்ற உறுப்புக்கள் தொனிநூல் கூறும் தொனிச் சிறப்பை வற்புறுத்துவன, மெய்ப் பாட்டுறுப்பு சுவைத் தொனியாயமையும். எச்சவுறுப்பு பொருட்டொனி அணித் தொனிகளாக அமையும். இவ்வுண்மைகள் மேலே விளக்கப் பெறும். இவ்வுறுப்புக்கள் குறைவின்றி அமைந்த செய்யுளைக் காணும் போது 'தொனிச் சிறப்பமைந்த காவியமே தலை சிறந்த காவியம்' என்று தொனிநூல் வற்புறுத்துவதுபோல வற்புறுத்த வேண்டிய நிலையும் ஏற்படவில்லை.

இவ் விருபத்தாறு உறுப்புக்களின் மேலும் அம்மை முதலியன சில கூறப் பெறுகின்றன. அவை :—

[1]"அம்மை அழகு தொன்மை தோலே
விருந்தே இயைபே புலனே இழைபெனுப்
பொருந்தக் கூறிய வெட்டொடுந் தொகைஇ
நல்லிசைப் புலவர் செய்யு ளுறுப்பென்
வல்லிதிற் கூறி வகுத்துரைத் தனரே-"

என்று கூறி முடிக்கப் பெறுகின்றன. இறுதியிற் கூறிய எட்டுறுப்பும் ஓரோர் செய்யுட்கு ஓரோ வொன்றேயும் வரலாம். ஆனுல் முற் கூறிய இருபத்தாறு உறுப்புக்களும் ஒன்று ஒன்றனை இன்றி அமையாது ஒருங்கே வருவன. இவ்வுண்மையைப் பேராசிரியர் உரைநோக்கி உணர்க. இவ் விருபத்தாறனுள்ளுங்கூடச் சிலவற்றிற்குத் தொல்காப்பியரே விலக்கு அளிக்கின்ருர்.

[2]"மாட்டும் எச்சமு நாட்ட மின்றி
உடனிலை மொழியினுந் தொடர்நிலை பெறுமே."

என்பது அவ்விலக்கு, இவ்வாறு கூறுவதிலிருந்து இவை அடியோடு வேண்டியதில்லை என்று கூறிவிட முடியாது.

---

1. தொல். செய்யுளில்: 1. 2. தொல். செய்யுளில், 206.

602

மக்களுறுப்புச் சில குறைந்தாரையும் மக்களென்றே வழங்குவதுபோல இச்சில வுறுப்புக்கள் குறைந்தனவற்றையும் செய்யுள் என்று வழங்கலாம் என்பதற்கே இது கூறியது. இந்நிலையிலுங்கூட எச்ச வுறுப்பொன்று தவிர்க்கப்படலாமேயன்றி மெய்ப்பாட்டுறுப்பு தவிர்க்க இயலாததே. அங்ஙனமாகும்போது சிலவுறுப்புக் குறைந்ததாகுமேயன்றிச் தொனிச் சிறப்பு தவிர்க்க வியலாததே. எவ்வகையிலும் செய்யுளுறுப்புக்கள் பலவும் குறைவின்றி அமைந்த செய்யுள்களில் தொனிச் சிறப்பு தவிர்க்க இயலாததாகவே அமைகின்றது. இதனாலேயே தொனிச் சிறப்புடைய காவியமே தலைசிறந்த காவியம் என்று தொனிநூல் கூறுவதுபோல் கூறல் வேண்டாதாயிற்று.

## 8. தொனியின் அடிப்படைப் பாகுபாடு.

தொனியின் அடிப்படைப் பாகுபாடு பொருள், சுவை, அணி என்ற அடிப்படையில் நிகழ்வதாகின்றது என்பதை முன்னரே அறிந்தோம். இப்பாகுபாடுங்கூட இதே முறையில் தொல்காப்பியத்துட் காணப்படுகின்றது என்றால் அது அறிஞர்க்கு வியப்பையே விளைக்கும். சிறியேன் மொழிகின்ற இந்தச் சிற்றுரையைச் செவியேற்றுப் பின்னர் ஆராய்ந்து தெளிந்து பொருந்துமேற் கொள்க. இவ்வுண்மை காண்பதற்குப் பொருளியலுள் வரும் உள்ளுறைகளைக் கூர்ந்து காண்டல் வேண்டும்.

> [1]"உடனுறை, உவமம், சுட்டு, நகை, சிறப்பெனக்
> கெடலறு மரபி னுள்ளுறை யைந்தே."

என அவை மொழியப்பட்டிருக்கின்றன, இவற்றுள் உடனுறையாவது இறைச்சி. இது பொருளியலுள்ளேயே கூறப்பெறுகின்றது. உவமமோ உள்ளுறை உவமம் ஏனையுவமமென இரு வகைத்து. அகத்திற்கே சிறப்புரிமை பெற்றிருத்தல் கருதி அகத்திணை இயலுள்ளும், உவமமாதல் ஒப்புமை

1. தொல். பொருளியல். 48.

நோக்கி உவமையியலுள்ளுமாக உள்ளுறை உவமம் உணர்த்தப்பெறுகின்றது. இனி எஞ்சி நிற்பன சுட்டு நகை சிறப்பு என மூன்று. இம் மூன்றும் யாண்டு உணர்த்தப் பெறுகின்றன? என்று கேட்டால் விடைபெற இயலாதிருக்கின்றது. சிறிது சிந்தித்துப் பார்ப்போம். அன்புறுதகுந இறைச்சியுட் சுட்டுதலாவது அன்புறு தகுநவாய செய்தியை இறைச்சியுள் உணரவைத்தலன்றே. அதுவும் ஒரு சொற்றொடர்ப் பொருளாக அமையக்கூடியதுதான். அவ்வாறு சொற்றொடர்ப் பொருளாக அமையத் தகுவனவற்றையே **சுட்டு** என்று வழங்குகின்றது இவ்வுள்ளுறை. இது பொருட்டொனி இயல்புடையது. இனி **நகை** என்பதை நோக்குவோம். உள்ளுறையாக அமைதற்குரியது நகை ஒன்று மட்டுமன்று மெய்ப்பாடு எட்டும் அத்தகையனவே ஆதலின் நகை முதலாக வரும் மெய்ப்பாட்டைக் குறிப்பதற்கே அது நிற்பதாகக் கொள்ளுதல் வேண்டும். ஆகவே மெய்ப்பாட்டுத் தொனியின் இயல்பைப் பெற்றிருப்பது நகை என்ற உள்ளுறை. இனிச் **சிறப்பு** என்பதொன்று எஞ்சியுள்ளது. உவமமொன்று உள்ளுறையாக நிற்பதனாலேயே உள்ளுறை உவமம் எனப்பட்டது. அஃதும் தவலறுஞ் சிறப்பினை உடையதாகின்றது. ஆதலின் அத்தன்மை வாய்ந்த தொன்றே இங்கு சிறப்பு என்னும் உள்ளுறை யாதல் வேண்டும். இவ்வியல்பை நோக்கும்போது இது அணித்தொனியின் இயல்போடொத்ததாகின்றது. அன்று, உவமை ஒன்றே வழங்கியது. இன்று, அஃதே பலதிறப்பட்டு பல அணிகளாக வழங்குகின்றது. இத்துணையே வேறுபாடு. உள்ளுறை ஐந்தனுள்ளும் இம்மூன்றுமே சாலுமாயினும் இறைச்சியும் உள்ளுறை உவமமும் அகத்திற்கே சிறப்புரிமை பெற்றிருப்பதனாலும் உவமப் பகுதியாய ஏனையுவமம் தொனியாதற்குச் சிறந்ததன்றாதலினாலும் அவற்றைத் தனியே நிறுத்தி அவற்றையும் அடக்கிக் கொள்ளுந் தகுதிவாய்ந்த இம்மூன்றையும் இறுதியில் வைத்து ஐந்தெனப்பட்டதாம். இம் மூன்றிற்கும் விளக்கம் வேண்டுமானால் பொருளியல் முதல் மூன்று இயல்களையுமே நோக்குதல் வேண்டும். சுட்டின் விளக்கம் பொருளியலுள்ளும்,

604

நகையின் விளக்கம் மெய்ப்பாட்டியலுள்ளும், சிறப்பின் விளக்கம் உவமவியலுள்ளும் தரப்பெறுகின்றன என்பதும் எளிதிற் காணப்பெறும். இவ்வுள்ளுறைகளின் அமைப்பும் இவ்வியல்களின் வரிசையும் நோக்க இம்முடிவிற் தவரவேண்டியதாக நேர்கின்றது. இம்முடிபு கண்டோமாஞல் இப் பாகுபாடும் தொனி நூற் பாகுபாட்டோ டொத்ததொரு பாகுபாடே என்பதுந் தெளிவாம்.

ஆனுல் தொனிபற்றிய உண்மைகளை விளக்கி முதன் முதல் தொனிநூல் என்று ஒரு தனி நூல் செய்தவர் ஆனந்தவருத்தனரே ஆயினும் அந்நூல் தோன்றுதற்குப் பன்னூராண்டுகட்கு முன்னரே தொல்காப்பியமும் இத்தகைய உண்மைகளை, காணக்கூடிய வகையில் இலக்கணம் வகுத்திருக்கின்றது; இருந்தும் அவற்றை நாம் உணர்ந்துகொள்ள இயலவில்லை. பிற்கால இலக்கண நூல்களும் இவற்றை உள்ளவாறு உணர்த்தாது ஒழிந்தன. அதனுல் அவை வளம்பெற்று வளர இடமில்லாது போயிற்று. பிற்கால இலக்கியங்களுட் காணப்படும் வளர்ச்சியுங்கூடப் பிற்கால இலக்கணங்களுள் இடம்பெற இயலாதாயிற்று. சங்க இலக்கியங்களுட் காணப்பெருத சில தொனி வகைகளைப் பிற்கால இலக்கியங்களுட் காணலாம்.

[1] "சொல் லாற்றலால் தோன்றுந் தொனி"

இவ்வகையைச் சார்ந்ததே. இதனைத் தெளிவுபடுத்திக் கொள்ளுதற்குரிய வழி வகைகளைப் பிற்கால இலக்கணங்களுட் பெற்றிலேம். இத்தகைய தொனி வகைகள் பலவற்றையும் குறிப்பு என்று ஒரு பொதுப்பெயர் கொண்டே குறித்துச் செல்ல நேர்கின்றது. அவற்றின் உண்மை இயல்பை விளக்கமுறக் காண்பதற்கு வேறு வழி இல்லை. இந்நிலையில் தொனி நூல் நமக்குப் பேருதவி புரிகின்றது. தொல்காப்பிய உண்மைகள் பலவற்றைக் காண்பதற்குந் துணைசெய்கின்றது. இவ்விடத்தில் ஒன்றை மட்டும் நாம் மறந்துவிடக் கூடாது.

[1] S. V. O. I. Vol. XI. No. 2.

முதன்முதல் தொனிக் கொள்கையை நிறுவியது தொனி நூலே ஆயினும் தொனி எனற்குரிய பொருள்மட்டும் பண்டு தொட்டு வழங்கிவருவனவே. அத்தகைய பொருள்கட்கு வேண்டும் இலக்கண அமைதியும் பன்னூறுண்டுகட்கு முன்னரே பெற்றிருக்கின்றோம். அங்ஙனம் பெற்றிருந்தும் இடையில் அதனை உணராது அயர்ந்தோம். அவ்வளவேயன்றி இத்தொனிப் பொருள்கள் எவ்வகையிலுந் தமிழுக்குப் புதியன அல்ல. எவ்விதத்தும் இவை பிறரிடமிருந்து கடன் வாங்கவேண்டிய அல்லது வாங்கப்பட்ட பொருள்கள் அல்ல. நம் முன்னோர் நமக்காகத் தேடிவைத்த பொருள்களே இவை. இதுவரையில் இவை நமக்குரியன என்பதை நாம் அறிந்திலேம். இப்பொழுது நம்முடையன என்றே அறிகிறோம். அறிஞர்கள் ஆராய்ந்து தெளிக.

---


"ஞானசம்பந்தம்"

அரிய கட்டுரைகளுடன் வெளிவரும் திங்கள் வெளியீடு

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்திலிருந்து வெளிவருவது. சைவசமயச் சார்பாக எழுதப்படும் தெளிவான கட்டுரைகள் அடங்கியது. சைவ சமயத்தின் உண்மைகளை உணர்வதற்குப் பெருந்துணையாவது.

ஆண்டுக் கையொப்பம் ரூ. 1—8—0.

செயலாளர்,
"ஞானசம்பந்தம்" காரியாலயம்,
தருமபுரம், மாயூரம் P. O.

606

# தருமபுர ஆதீனப் பிரசாரம்

30—10—52 வியாழக்கிழமை **குத்தாலம்** ஸ்ரீ உக்தவேதீஸ்வர சுவாமி தேவஸ்தானம் பிரசார மண்டபத்தில் கடவுள் வாழ்த்துடன் மாலை 6 மணிக்குப் பிரசாரம் தொடங்கிற்று. போர்டு ஹைஸ்கூல் தமிழாசிரியர் வித்வான். திரு. வை. சுந்தரேச வாண்டையார் அவர்கள் ஆதீனப் பிரசாரப்பணி மக்களால் பாராட்டப்பெற்று வருவதை எடுத்துச்சொல்லி ஆதீனத்திற்குப் பொதுமக்களின் சார்பில் நன்றி தெரிவித்துக் கொண்டார்கள். ஆதீனக் கல்லூரித் துணைத்தலைவர் வித்வான், திரு. ச. தண்டபாணி தேசிகர் **'ஏன் ?'** என்பதுபற்றியும், ஆதீனப் பாடசாலை ஆங்கில ஆசிரியர் பிர்ம்ஸ்ரீ N. வெங்கட்டராமையர் **'மக்கள் வாழ்வு'** என்பதுபற்றியும் பிரசங்கித்தார்கள்.

31—10—52 வெள்ளிக்கிழமை **திருப்பந்தணை நல்லூர்ச்** சிவாலயத்தில் மாலை 7 மணிக்குத் தொடங்கியது. ஆதீனப் பாடசாலை மாணவர்கள் திருமுறை ஓதினர். ஆதீனக் கல்லூரிப் பேராசிரியர் வித்வான், திரு. முத்து சு. மாணிக்கவாசக முதலியார் **'மக்கட் சிறப்பு'** என்பதுபற்றியும், ஆதீனப் பாடசாலைத் தேவார ஆசிரியர் திரு. R. வேலாயுத ஓதுவார் **'தமிழ் வேதச்சிறப்பு'** என்பதுபற்றியும் சொற்பொழிவாற்றினார்கள். உள்ளூர் திரு. நாகலிங்கஞ் செட்டியார் முடிவுரையாகச் சமயக் கருத்துக்களை எடுத்து மொழிந்தார்கள். ஆலய டிரஸ்டி திரு. மாணிக்க முதலியார் அவர்கள் பிரசார கோஷ்டியார்களைச் சிறந்தமுறையில் வரவேற்று உபசரித்தார்கள்.

1—11—52 சனிக்கிழமை **திருச்சிற்றம்பலம்** ஆதாரக் கல்வி நிலையத்தில் நடைபெற்றது. ஆலய வழிபாட்டிற்குப் பிறகு ஆதீனக் கல்லூரிப் பேராசிரியர் வித்வான், திரு. V. S. குருசாமி **'வாழ்வு மலர்'** என்பதுபற்றிப் பேசினார். அடுத்து கல்லூரி மாணவர் C. சிங்காரவேலன் மக்கள் எவற்றைச் சிந்திக்கவேண்டும் என்பதைச் **'சிந்தனை'** என்ற தலைப்பில் பேசிய பிறகு திரு. R. வேலாயுத ஓதுவார் **'நால்வர் காட்டியவழி'**யை அனைவர்க்கும் சொல்லிக் காட்டினார்கள். கடவுள் வாழ்த்துடன் இனிது முடிந்தது.

607

*2—11—52* ஞாயிறு: தேரழுந்தூர் என வழங்கும் **திருவழுந்தூர்** சிவாலயத்தில்; வித்வான், திரு. முத்து சு. மாணிக்கவாசக முதலியார் '**சிவாலய வழிபாடு**' செய்யும் முறையை விளக்கினார்கள். ஆதீனப்பாடசாலை ஆசிரியர், வித்துவான், திரு. வை திருஞானசம்பந்தம் '**சிந்தித்திரு**' என்பது பற்றிப் பேசினார். ஆதீனப்பாடசாலை ஆசிரியர் மாணவர்களின் தேவார பாராயணமும் நிகழ்ந்தது. கூட்டத்தின் தொடக்கத்திலும் இறுதியிலும் ஆலய மேற்பார்வையாளர் திரு. ராஜமாணிக்க முதலியார் அவர்கள் சமய உண்மைக் கருத்துக்கள் சிலவற்றைச் சொல்லி, பிரசாரப்பணியை பாராட்டிய தோடு, 'இதுபோல் பலமுறை இங்கு வந்து பிரசாரம் செய்ய வேண்டும்' என்றும் கேட்டுக்கொண்டார்கள்.

*3—11—52* திங்கள்: **வைத்தீஸ்வரன் கோயில்** தேவஸ் தானத்தில் நடைபெற்றது. அன்று கார்த்திகை. சீகாழி கட்டளை விசாரணை வித்துவான், ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் '**கார்த்திகேயன்**' சிறப்பியல்புகளை விளக்கிப் பேசினார்கள். திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியார் '**உணர்வும் உருக்கமும்**' என்பதுபற்றிப் பேசினார்கள்.

*5—11—52* புதன்கிழமை: திருநாளைப்போவார் திருப் பணிக்கு இலக்காகிய **திருப்புன்கூர்ச்** சிவாலயத்தில் நடை பெற்றது. வித்துவான் ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் '**பெய்யுமாமழை**' என்பதுபற்றியும், வித்துவான் திரு, முத்து. சு. மாணிக்கவாசக முதலியார் '**திருநாளைப் போவார் நாயனார்**' என்பதுபற்றியும் சொற்பொழிவாற்றினார்கள். இறைவழிபாடும் சிறப்பாக நடைபெற்றது.

*6—11—52* வியாழக்கிழமை **மணல்மேடு** போர்டு ஹைஸ்கூலில் நடந்தேறியது. பள்ளிக்கூடத் தலைவர் ஆசிரியர்கள், மாணவர்கள், மற்றுமுள்ள பெருமக்கள் அனைவரும் கூடியிருந்தார்கள். திருமுறை ஓதப்பட்டது. வித்துவான், ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் '**கடமையும் உரிமையும்**' என்பதுபற்றியும், வித்துவான், திரு, V. S. குருசாமி '**வேண்டுவது காயா? கனியா?**' என்பதுபற்றியும், பிர்மஸ்ரீ N. வெங்கட்டராம ஐயர் '**நம்பிக்கை**' என்னும் பொருள்பற்றியும் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள்.

(வரும்)

# கோசார பலன்



ஜோதிஷார்ணவம், பிர்மஸ்ரீ. முத்துசோதிடர், திருவிடைமருதூர்.

(நந்தனஞூ கார்த்திகைமீ 1உ முதல் 29உ வரையில்)
(16—11—52 முதல் 14—12—52 வரையில்)

## 1. மேஷம், அசுவதி, பரணி, கார்த்திகை ¼.

அசுவதியும், கிருத்திகை முதல் பாதமும் சம்பந்தப்பட்ட மேஷம் மிசிரபலனைத்தரும், கஷ்டமும் சுகமும் மாறிமாறி வரும். மிகுந்த துன்பத்தை அடைந்து கொண்டிருக்கும்போதே ஒரு நல்ல ஸமாசாரக் கேள்வியும் தனவரத்தும் ஏற்பட்டு மனம் சாந்தியடையும். பரணி பலன் தாங்கமுடியாத ஆபத்துக்கள் உண்டுபண்ணும், சத்துருக்களால் பலவித இடையூறுகளும் சொத்து நஷ்டமும் அவமானமும் கிட்டும், ராஜாங்க நிர்ப்பந்தம் ஏற்படும். வேண்டியவர்கள் எல்லாம் விலகிவிடுவார்கள். நாலுபக்கம் பார்த்தாலும் சத்துருக்களாகவே தென்படுவார்கள். தொழிலாளியாகில் வழக்குகளில் சிக்கிக்கொள்வான். வியாபாரியாகில் நஷ்டமடைவார், பிரபுக்களாகில் மேல் கண்ட பரணி பலன் யாவும் அனுபவிக்க நேரும். கடவுளைப் பூர்ணமாய் நம்பி, ஸாதுக்களையும் பெரியோர்களையும் தபஸிகளையும் சரண் அடைந்தால் ஒருவாறு தப்பலாம்; கடவுள்தான் ரக்ஷகராவர். புதனும், வியாழனும் அசுபமாகும்.

## 2. விருஷபம். கார்த்திகை ¾, ரோஹிணி, மிருகசீரிஷம் ½.

ரோஹிணி, மிருகசீரிஷம் சம்பந்தப்பட்ட விருஷபராசி பலன் முற்பாதியில் அசுபமும் பிற்பாதியில் சுபத்தையும் தரும். எதிர்பாராத நன்மைகள் கிட்டும், பணமுடை தீரும். கடன் நிவர்த்தியாகும். தொழில் மேலாகும். கார்த்திகைக்கு முன்னும் பின்னும் அசௌகரியங்களும், நடுப்பகுதி பத்து தினங்கள் சுபமாயும் இருக்கும். விவசாயிகளாகில் ஈதிபாதைகளால் பாதிக்கப்படுவார்கள். தொழிலாளிகள் கஷ்டப்படுவார்கள். வியாபாரிகள் ராஜாங்க நிர்ப்பந்தத்தில் சிக்கிக்கொள்வார்கள். வீண் செலவுகளும் நஷ்டங்களும் வியாதி பீடையும் ஏற்படும். உத்தியோகத்திலிருப்பவர்களாகில் கீழ்வேலைக்காரனால் சிரமம் காட்டும். சனி, புதன் சுபவாரமாகும்.

3. **மிதுனம்.** மிருகசீரிஷம் $\frac{1}{2}$, திருவாதிரை, புனர்பூசம் $\frac{3}{4}$.

திருவாதிரைக்கு மிசிரபலன்கள் நடக்கும். பண முடையும், குடும்பத்தொல்லையும் கடன் உபத்திரவமும் ஏற்படும். புனர்பூசம் சம்பந்தப்பட்ட மிதுன பலன் சுபத்தைத்தரும். சத்துரு நாசம் ஏற்பட்டுச் சந்தோஷமுண்டாகும். நஷ்டதனம் சேரும். ரோக சாந்தியாகும். வியவஹாரம் ராசியாகும். ஜயமடையும். பந்து மித்திர சேர்க்கை, தேவதாகுருபக்தி, புத்திராதிகளுக்கு மேன்மை, உத்தியோக விருத்தி இவை ஏற்படும். மிருகசீரிஷ பலன் மத்தியமாகும்; நல்லதுமிராது கெட்டதும் அதிகமிராது; எதுவும் மந்தமாய் ஓடிக்கொண்டிருக்கும். புதனும் வியாழனும் நலன் காட்டும்.

4. **கடகம்.** புனர்பூசம் $\frac{1}{4}$, பூசம் ஆயில்யம்.

ஆயில்ய நக்ஷத்திரகாரர், மிகுந்த கஷ்டத்திலிருந்து விடுபடுவார்கள். கடன் தொல்லை ஒருவாறு ஹிம்ஸை நீங்கும். தெய்வ பலமுண்டாகும். புனர்பூசமும், பூசமும் சந்தோஷமில்லாமல் ஓடிக்கொண்டிருக்கும். விவஸாய நஷ்டம், சத்துருபாதை, கலகத்தால் வியவஹார உற்பத்தி, சோர பயம், உஷ்ணபீடை, நேத்திரரோகம், பித்தாதிக்கியம், வைத்தியசெலவுகள் ஏற்படும். மனம் நிம்மதியிராது. வெள்ளியும், சனியும் சுபவாரமாகும்.

5. **ஸிம்மம்.** மகம், பூரம், உத்திரம் $\frac{1}{4}$.

மகத்துக்கு மாதம் பூராவும் சுபமாகும். ஆனல் மத்தியில் வியாதியால் கொஞ்சம் சிரமம் காட்டும் பூரத்துக்குத் தொழில் குறைந்து கடன் ஏற்படும். உத்திரத்துக்கு ஸிம்மத்தின் சம்பந்த பலன் சுபமாகும். வியாபார விருத்தி, தொழில் மேன்மை, நஷ்டதனம் கிடைத்தல், வியவஹார வெற்றி, கீர்த்திபத்திரம் கிடைத்தல், நல்லோர் பெரியோர் நேசம், மனதுக்குச் சாந்தி, எடுத்தகாரியம் ஸித்தி இவைகள் ஏற்படும். ஞாயிறும், வெள்ளியும் சுபவாரமாகும்.

6. **கன்னி.** உத்திரம் $\frac{3}{4}$, ஹஸ்தம், சித்திரை $\frac{1}{2}$.

உத்திரமும் சித்திரையும் சம்பந்தப்பட்ட கன்னியாராசி பலன் சுபமாகும். வியாதி சாந்தி, உத்யோகவிருத்தி, கீர்த்தி பத்திரம் கிடைத்தல், செல்வாக்கு, மேலோர் பெரியோர் அன்பு,

தெய்வபலம் கிட்டுதல், சத்துருஅழிதல், நஷ்டதனம் கிடைத்தல், விவஹார வெற்றி, மனதுக்கு நிம்மதி முதலியவைகள் காட்டும். ஹஸ்த நக்ஷத்திரபலன், கஷ்டத்தில் சுகம்காட்டும். பல நிர்ப்பந்தங்களும், மனசாக்ஷிக்கு விரோதமாக நடத்தலும், தெய்வ கோபமும், மேலோர் பெரியோர் அன்பு குறைவும், எடுத்த காரியம் நடைபெருமல் தடைப்படுதலும், மனக்குழப்பமும் ஏற்படும் தெய்வபலமிருந்தால் சமயங்களில் யுக்திதோன்றி ஜயமுண்டாகும். புதன், வெள்ளி சுபமாகும்.

7. துலாம். சித்திரை $\frac{1}{2}$, சுவாதி, விசாகம் $\frac{3}{4}$.

மூன்று நக்ஷத்திரக்காரர்களுக்கும், சஞ்சார பலன் கிட்டும். தெய்வபலத்தால் காலம் ஓடும், தொல்லைகளும் ஈதிபாதைகளும் அதிகமாகும் விவசாயிகளாகில் நஷ்டமும் கஷ்டமும் விவஹாரமும், பயமும் ஏற்படும். தொழிலாளி வியாபாரிகள் சற்று நலனடைவார்கள். ரோகபீடை காட்டும். விசாகத்துக்கு அதிக கஷ்டமுண்டாகும். சித்திரை துலாத்துக்கு முற்பாதி நலனும் பிற்பாதி சிரமமும் காட்டும். சுவாதிக்குச் சில அசாத்தியமெல்லாம் சுலப சாத்தியமாகி மனச்சாந்தி ஏற்புடும். தொழில் விருத்தியாகும். புதனும், திங்களும் சுபமாகும்.

8. விருச்சிகம், விசாகப், $\frac{1}{4}$, அனுஷம், கேட்டை.

அனுஷமும் கேட்டையும் சம்பந்தப்பட்ட விருச்சிகராசி பலன், முற்பாதியில் கஷ்டத்தையும் பிற்பாதியில் சுகத்தையும் தரும். குடும்பம் மேன்மையடையும். வெகுதூரத்திலிருந்து சுபசமாசாரம் வரும். தனம் கிடைக்கும். விசாகம் விருச்சிகம் கஷ்டம் அதிகமாகும். ரிணம், ரோகம், சத்துரு, சோரன் இவர்களால் துன்பமுண்டாகும். சனியும் செவ்வாயும் சுபம் தரும்.

9. தனுசு. மூலம், பூராடம், உத்திராடம் $\frac{1}{4}$.

மூலநக்ஷத்திரம் சம்பந்தப்பட்ட தனுராசிபலன் நலன் தரும். உத்யோக லாபம், மேலோர் பெரியோர் சிநேகம், தெய்வானுகூலம், காரியசித்தி, கடன்நிவர்த்தி, குடும்ப சுகம், தனவரத்து முதலிய சுபங்கள் நடைபெறும். பூராடத்துக்கும் மேல்கண்ட

சுபத்தோடு உத்தியோக விருத்தியும், கீர்த்தி பத்திரமும் கிடைக்கும். உத்திராடம் சம்பந்தப்பட்ட தனுராசிபலன் குடும்பத் தொல்லையோடு சந்தோஷமும் தரும். தெய்வபலம் கிட்டும். வியாழனும் செவ்வாயும் சுபவாரமாகும்.

10. மகரம். உத்திராடம் $\frac{3}{4}$, திருவோணம், அவிட்டம்,

இந்த மூன்று நக்ஷத்திரக்காரர்களுக்கும் சென்ற மாதம் போலவே சுபமாகும். அந்தந்த தொழில் முறைகளும் மேன்மையடையும். எதிலும் அனுகூலமுண்டாகும். தன தான்யலாபம், விவஹாரவெற்றி, சத்துருக்கள் சரணடைதல், ரோக சாந்தியாகுதல், கடன் நிவர்த்தி, பந்துமித்திர சமாகமம் இவைகள் உண்டாகும். புதன், வியாழன், வெள்ளி, சுபவாரமாகும்.

11. கும்பம். அவிட்டம் $\frac{1}{2}$, சதயம், பூரட்டாதி $\frac{3}{4}$,

மூன்று நக்ஷத்திரபலனும், ரொம்ப திருப்தியளிக்காது. ஏதோ சில காரியங்கள் நன்மையைப்போல் காட்டும். கஷ்ட பலன்தான் முன்நிற்கும். அவிட்டம் சம்பந்தப்பட்ட கும்பமும் பூரட்டாதி சம்பந்தப்பட்ட கும்பராசிபலனும் இடம் மாறலுடன் போக போக்கியங்களாக அல்பசுகமாக மனம் சாந்தியடையும். அதிகச் செலவுகளும், நஷ்டமும் ஏற்படும். இருந்தாலும் அது நியாயமானதாகக் கருதிக்கொண்டு சந்தோஷமாக ஓடும். செவ்வாயும் வெள்ளியும் சுபவாரமாகும்.

12. மீனம். பூரட்டாதி $\frac{1}{4}$, உத்திரட்டாதி. ரேவதி.

உத்திரட்டாதி, ரேவதி சம்பந்தப்பட்ட மீனராசி பலன் சுபமாகும். உத்தியோகலாபம், கீர்த்தி, சுபசந்தோஷ சமாசாரக்கேள்வி, குடும்ப மேன்மை, கிரஹ பூமி லாபம், ஆபரணச்சேர்க்கை, பெரும்பொருள் கிடைத்தல், தெய்வபக்தி பிரகாசித்தல், நல்லோர் பெரியோர் சிநேகமுண்டாகுதல், பிரதிஷ்டாபலன்கன், யஞ்ஞயாகாதிஸத்கர்ம பலன்கள் ஏற்படும். மத்தியப்பகுதி 10 தினங்களில் சற்று மனம் குழப்பமுண்டாகும். பூரட்டாதிக்கு மீனராசி பலன் சுபமிராது. திங்களும், வியாழனும் சுபவாரமாகும்.

---

आणवं मायया रूपं काम्यं मायेयकं त्विति ।
तिरोधानकरी पञ्च मलाः पाशं यदात्मनः ॥
जगच्चित्रं समालिख्य स्वात्मकुलिकयात्मनि ।
स्वयमेव समालिख्य प्रीणाति परमेश्वरः ॥

எனவும் பிறவும் வருமாற்றுல் "குறையு மாயாவாதிகொண்ட தோடுங் கூடவே சித்தாந்த நிலையங் கூறி நிறையவரு மர புடைத்தாய்" என்றது கண்டுகொள்க. இனிப் 'பதபதார்த்தம் நிகழ் முக்கிய விலக்கியங்கள் சுத்தா சுத்தம் முறையி னவாந்திர வாக்கியத்தினியலு மிலக்கணையு மொழிகுருவின் வாய்க்கேட்டல்' மேல் விளங்கும். 36

37. பதந்தொந்த தசியெனவே கூறுபதம் பொருடன்
பகரினீ யதுவாகின் றுயென்று சிவன்
விதந்தபர மாய்ச்சிவமாய் மேவுமயிக் கத்தை
முக்கியந்தா னியைந்த வுபாதித் திரளாம்
சிதைத்திவற்றை நின்றவழி விலக்கியமாய சுத்தம்
செறிந்த வுபாதித் திரளைத் தானெனவே நிற்றல்
துதைந்த வுபாதிகளனைத்தும் நீங்க மாற்றுற்
சொல்லுமறி வாவதுதான் சுத்தமாகும்.

'பதந்தொந்ததசி' என்பது தத்துவமசி வாக்கியத்திற்குக் கூறும் பகுதிகளுட் பதமும் பதப்பொருளும் முக்கியமுமிலக்கிய முஞ் சுத்தமும் அசுத்தமுமான அறுவகையுங் கூறுகின்றது. ஈண்டுப்பதந் தொந்ததசி என்று மாட்டல் ஞானசித்தியில்,

त्वं तदस्येति तन्मध्ये मोचनं शुद्धमात्मनः ।

என்பதனுல் உணர்க. இனிப் "பதப் பொருடான் பகரினீயது வாகின்றுய் என்று சிவன் விதந்த பரமாய்ச் சிவமாய் மேவு மயிக்கத்தை" யென்பது அதிலேயே,

तत्त्वमस्येति यद्वाक्यं सोऽहमस्मि प्रभावितम् ।

எனவும்,

त्वं पद मात्मरूपं तु तत्पदं परमात्मनः ।
असि पदं तयोरैक्यमेवं तत्त्वमसि क्रमम् ॥
असिपदं शिवरूपं द्वयोरैक्यं प्रकाशितम् ।

எனவும் பிறவும் வருமாற்றுன் உணர்க. இனி "முக்கியந் தானியைந்தவுபா தித்திரளா" மென்பது அதிலேயே,

तथाबद्धःस्थितः पाशैर्यथा बद्धस्तथा नरः ।

என்பதனுல் உணர்க. இனி 'சிதைத்திவற்றை நின்ற வறி விலக்கியமா' யென்பது அதிலேயே,

सर्वोपाधिविनिर्मुक्तं तत्वं पदार्थप्रकाशकम् ।

என்பதனுல் உணர்க. இனி "யசுத்தஞ் செறிந்த வுபாதித் திரளைத் தானெனவே நிற்றல் துதைந்தவுபா திகளனைத்தும் நீன்கு மாற்றுற் சொல்லுமறி வரவதுதான் சுத்த மாகும்" என்பது அதிலேயே,

पाशबद्धस्तथा जीवः पाशमुक्तस्तदा शिवः ।

எனவும்,

त्वं पदं तु अशुद्धयर्थं सर्वोपाधिसमन्वितम् ।
उपाधिशून्यजीवात्मा ...र्थस्य शुद्धिमान् ॥
तत्सर्वं देहयोर्व्याप्तं जगदेतच्चराचरम् ।

எனவும் பிறவும் வருமாற்றுன் உணர்க. 37

38. * * *

**தொம்பதந்தான்** என்பது தத்துவமசி வாக்கியத்தின் பதத்திற்கு வாக்கிய பேதங்களும் லக்ஷண பேதங்களுமாமாறு கூறுகின்றது. ஈண்டுப் பதத்திற்கு வாக்கியத்துவமின்றேனும் அதன் அங்க மாகலின் உபசாரத்தால் வாக்கிய மெனவும்

வழங்கப்படும். அது அவாந்திர வாக்கியமெனப்படும். அது வருமாறு பரிபூரண சித்தியில்,

இங்கிப் படிவே தத்திலெழுந்திடு தத்துவ
மசிக்கினிதாய்த்
துங்கத்துணையா மவாந்தரமாய்ச் சொல்லப்படு
தூய்மொழி யாவையெனிற்
சம்சற்கம் விசிட்ட மகண்டமுடன்
சருவங்க விதம்பிரமம் மதுவும்
பங்கத்தெழு நீலமணத்தொடு ருபசிருற் பல
மென்றும் பகர்ந்தனவே.

என வருமாற்றானுணர்க. லக்ஷணையாமாறு மாயாவாதத்தில்

लक्षणा च त्रिधा जहल्लक्षणा अजहल्लक्षणा जहदजहल्लक्षणा चेति। जहल्लक्षणा नाम वाच्यार्थमशेषं परित्यज्य तत्सम्बन्धिन्यर्थान्तरे वृत्तिः। यथा गङ्गायां घोषः प्रतिवसति मनो ब्रह्म इत्यादि। अजहल्लक्षणा नाम वाच्यार्थापरित्यागेन अर्थान्तरे वृत्तिः। यथा शोणो धावति सत्यं ज्ञानमनन्तं ब्रह्म, इत्यादि। जहदजहल्लक्षणा नाम वाच्यार्थैकदेशं परित्यज्य एकदेशार्थान्तरे वृत्तिः। यथा सोऽयं देवदत्तः, तत्त्वमसि, इत्यादि। यथा सोऽयं देवदत्त इत्यादिवाक्यं स्ववाक्यार्थविरोधि यतः अतः परोक्षापरोक्ष देशकालादिकं परित्यज्य उभयत्राविरुद्धदेवदत्तस्वरूपमात्रमुभाभ्यां पदाभ्यां लक्षयित्वा एकत्वेन प्रतिपादयति तथा तत्त्वमस्यादिवाक्यमपि स्ववाक्यार्थविरोधि यतः अतस्तस्माद्देहाद्यहङ्कारपर्यन्तं सर्वज्ञत्वाद्यज्ञानपर्यन्तं तत्त्वंपदावगतवाच्यार्थं परित्यज्य अविरुद्ध देहेन्द्रियादिविलक्षणं प्रत्यगात्मानं मायाविलक्षणं सत्यज्ञानानन्दात्मकं परं ब्रह्म त्वंतत्पदाभ्यां लक्षयित्वा असि पदेन त्वं तदसि तत्त्वमसि इत्यादि वाक्यार्थं मुख्याधिकारिणे प्रतिपादयति य एवं विद्वान्कृतकृत्यो भवति॥

எனவருமாற்றான் உணர்க. ஞானசித்தியில் சுத்தசைவ வேதாந்த முறையால் கூறப்படுகின்றது.

त्रिधात्मत्वं पदत्यातं त्रिधात्मत्वमवस्थितम् ।
त्रिधात्मासि पदं प्राप्तं नवात्मभेदमिति स्थितम् ॥
त्रिपदी शोधनं प्रोक्तं लक्षणा च त्रिधा स्थिता ।
जहल्लक्षणाऽजहल्लक्षणा जहदजहल्लक्षणा त्रिधा ॥
त्रिपदाः शुद्धयो ज्ञेयास्त्रिपदार्थस्वशोधनम् ।
मञ्चः क्रोशति गङ्गायां घोषः प्रवसतीति च ॥
तस्मान्मूढैस्तु या प्रोक्ता विज्ञानद्वयकारणम् ।
तत्तन्मध्यस्थिताः पुंसो घोषयन्ति स्थितिं कुरु ॥
एतत्प्रकरणैर्युक्तः सर्वदेहस्थितो गुरुः ।
तस्मान्मूढमतिः पुंसो वाचयित्वा स बोधकः ॥
यथा कर्मस्थितो देही कुर्याद्देहादि कारकम् ।
इदं प्रोक्तं तथा ब्रह्म शोधनं लक्षणा जहत् ॥
शोणस्तिष्ठति श्वेतस्तु धावतीत्यर्थको जवात् ।
तथैव परप्रोक्तेन प्रकाशे नात्मबोधकम् ॥
एतद्भावं तु सायुज्यं पशुपत्यैक्यसंस्थितम् ।
सोऽयं देवदत्त इति तत् जहदजहल्लक्षणा ॥
त्रिदशैकः पुमान्व्याप्तः शिव सायुज्यमाप्नुयात् ।
एवं तत्त्रिपदं शुद्धं लक्षणार्थं तदुच्यते ॥
शिवानन्दं महादेवि सत्यं ज्ञानमनन्तकम् ।
आनन्दान्तस्थितप्राप्तेस्तत्स्वरूपं प्रकाशितम् ॥
सर्वं सत्यं ज्ञानमनन्तं च आनन्दं चतुरुद्भवम् ।
सत्यात्मतत्परज्ञानशिवानन्दस्त्रिधा गुणाः ॥
आनन्दा...क्तयो योज्यं तत्प्राप्तं सद्गुरोः पदम् ।
स्वरूपं त...पञ्चगुणत्रय विभूतयः ॥
एतच्चतुः प्रकारार्थं सत्यादिगुणसंपदम् ।
रूपं गन्धं गुणं शोभा यथा उद्भवमुत्पलम् ॥
तथैवेत्यादि तद्भेदं स्वरूपं तस्य उद्भवम् ।
ज्ञानज्ञेय ज्ञातृकं च त्रिपदार्थं समुच्यते ॥
तस्मात्स्वरूपं सर्वत्र प्रकाशानन्द विग्रहम् ।

तत्प्राप्तिस्तत्परा मुक्तिः शिवजीवैक्यसम्भवम् ॥
सदा...यन्तु संप्राप्तिः शिवसायुज्यमाप्नुयात् ।

என்றற் றொடக்கத்தது. 38

39. * * *

**கேட்டான்முறை** என்பது சிரவண வியல்பு முடித்தினி மனனவியல்பு கூறுதுமென்கின்றது. ஈண்டு தூலப்பிரணவா நுபவத்தின் மேலுங்கூடு முபாதிகளாவன சூக்கும அகங்கா ராதிகளினிகழும் உன்னலெழுப்பல் முதலாயின. **பிறவு** மென்றது, அவ்வாறு நிகழுமவஸ்தாபிமான தேவதைகளை. இவற்றின் மேன்மேற் சேறல் பிரணவ பேதாநுபவாவத்தை களைக் கழித்துண்மைபெறச் சேறலை. மற்றனைத்தும் வெளி,

40. * * *

**காரியமாம்** என்பது சிவசாக்கிரஞ் சிவசொற்பனஞ் சிவசுழுத்தி சிவதுரியம் நான்குமாமாறு கூறுகின்றது இவ் வாறு வருவது தத்துவாமிருதத்தில்,

ஏற்பட வெழுநானென்றிடுதல் தொம்பதத்தசுத்த
......மெஞ்சங்கொ ...சங்கையினிகழுமென்றல்
மேற்பட ...மேய்யாமபரிசெ...லது வேறுக்குஞ்சீர்ப
......கரியாஞ்சித்தே திகழுதொம்பதத்தினசுத்தம்.

எனவரும். இதனால்,

முக்கியந்தானியைந்து............னட
......வுஞ்சிதைத்திவற்றை
கியமா மெனவு......

என்பதும் விளங்கும். அது பரிபூரணசித்தியில்,

அரிய நீயெனும் பதத்தினமு
......காரிய பாதிகளே மௌனப்பகர்வர்
சரி மிந்தியங்களொடு மனம் புத்திராலப்
பெ......தார்......ராஹங்காரஞ்சித்தமாம்...ங்காலே.

எனவும்,

எண்ணுநீ யெனும்பதத்தி னிலக்கியமெ......
பண்ணு... ...க்குரம்பையா...... பகருசங்காத
நண்ணுநா னென்றுஙிற்றல் ... நாயக னளிக்கு ஞானக்
கண்ணினு லவற்றைக் கண்டு கழன்றிடிற் சுத்தமாமே.

எனவும் வருமாற்ருன் உணர்க. காயவுபாதி கழலும்போது நிகழுமவத்தையினியல்பு வருமாறு. பரிபூரணசித்தியில்,

உன்னைநீ யறியாய் மைந்தா வொளிமறை யவத்தை யாகச்
சொன்னசா கரித மற்றைச் சொற்பனஞ் சுழுத்தி மூன்றும்
மன்னுசா கரித மொன்றில் வந்தவை கழிந்தா லன்றி
முன்னைமால் பிரம னுலு மொழியினு லறியொ ணுதே.

சிறந்தநன......தன்னவெதென்றெண்ணி
செறியுடலிற் பொறிபிறவு மொருபொருளிற் சேறல்
நிறைந்தநன வதிற்கனவ தேதென்றெண்ணி
னிகழுயிரொடு.........காண நிகழ்ச்சியாகும்
அறைந்தநன வினிற் சுழுத்தி யதுவேதென்னில்
அத்தினையும்விட்டுயிர்தான் றனித்து நிற்ற
லெறிந்தவெழு கடலணுவா யுருகு மன்பாய்
இவற்றையனு பவமாக விருந்து ளாரே.

பொதுவுறு பொறிபுலன் விடைய மாநன
வதுவுற மீண்...டு...ந் தடர்த்து மண்ணலே
விதமுறு பொறிபுலன் விடைய மின்றியே
பதியுறு புந்தியைப் பந்திக் கின்றதே.

புரையறு மனமிகப் பொறி புலன்களில்
வரையறு விடையமாய் நின்ற வாதனை
திரையுறு புனலென திகழு மித்தைநீ
கரையறு கனவெனக் கருது மைந்தனே.

மைந்தவம் மனமுதல் விகார மாயுற
வந்திரு விருந்தபின் வாய்த்த தேதுசொல்
சிந்தனை யிறந்துபின் றெரிவ தேதுமற்
றந்தமி லிருள தா யிருந்த தண்ணலே.

பரந்த வுயிரொன் றேயியங்கப்
படர்ந்த விருளாய்ப் பாவனையற்
றிருந்த விதுதா னற்சுழுத்தி
யிருளை-மாயை யவ்வியத்தந்
திருந்த மருவு பவவித்துச்
சிறந்த மூலப் பகுதியெனப்
புரிந்த போதம் பலவாகப்
புகல.........ரினிக்கேளே.

திணிந்த விருளாய்ப் பாவனையாத்
திகழ்ந்த மாயை தனைத்தெரிந்தங்
குணர்ந்த பொருள்வே ருென்றுளதோ
வில்லையோ பார்த்துரை யென்னப்
பணிந்து பர.........னேபகர் மூலப்
பகுதி யாதி பவவித்தா
யணைந்த மாயை தனையுணரு
மறிவுண் டுண்டென் றதிசயித்தான்.

அந்த மாயை தனையுணரு மறிவங்குளதே லதுநீயப்
பந்தமாயை தனைவிட்டுப் பகருமுனையே பார்மைந்தா
வெந்தை யேகனுமறிவிங் கிருளி னிடையா தபனெழுந்து
வந்தவாறே போலுன்றன் ......ரூன்றி வயங்குமால்

இறையநு போதம் நீயா யிருந்ததே னீமுன் கண்ட
மறைதரு மாயை தன்னை மதித்துநீ பார்த்துச் சொல்லாய்
குறைவறு கருணைக் குன்றே குறித்திட மெங்கு நானே
கறையுறு பாவை யெங்ஙன் கரந்ததோ கண்டி லேனே.

எனவரும். இனித்துரியநிலையில் அறிவானந்தசித்தியில்,

சாற்றிய மூலப் பகுதி யறிந்து தான துண்டென்
றேற்றிலை மூலப் பகுதியை விட்டிங் கிசைந் தறியாய்
மாற்ற மறவிங் கறிந்திடப் போதம் வளம் பெறவே
தோற்றி அறிந்தது தானே அறிவு துலங்கியதே.

காரிய நீங்கும் கரிபரன் றன்னள வென்று கண்டேன்
சீரிய போதம் விரிந்தது மீண்ட திறத்தசைவும்
கூரிய சொப்பன மென்றுகண் டேனிக் குறியிறக்க
நேரிய சிற்பெரும் பாழுயிருந்தது நின்மலனே.

இவ்விரண்டு செய்யுளுந் துரியநிலை என்பர். இனித் திரு மந்திரத்திலும்,

இந்திய மந்தக் கரண மிவையுயிர்
வந்தன சூக்க வுடலன்று மானன்று
தந்திடு மவ்வியத்த தந்தரு புருடனே
முந்துள மன்னு மாறுறு முடிவிலே. 2083

எனப் பிராணவாயு நீக்கமும்,

தன்னை யறியா துடலைமுன் றானென்றான்
தன்னைமுன் கண்டான் றுரியந் தனைக்கண்டா
னுன்னு துரியமு மீசனே டொன்றாக்காற்
பின்னையும் வந்து பிறந்திடுங் காணே.

எனத் துரியநிலையும் வந்தவாறு காண்க. இவ்வாறு தத்துவ ராயர் பிறர் கூறுவது. இனி முற்கூறிய திருமந்திரத்தில் "ஆறுறன்று முடிவில்லே" என்பதனானும்,

ஐயைந்து மாறுமோ ரைந்து நனவினி
லெய்து நனவு கனவுஞ் சுழுத்தியா
மெய்யும்பின் சூக்கமும் மெய்ப்பகுதி மாயை
யைய்யமுந் தானல னத்துரி யத்தனே. 2208

என வருதலானும் உபாதி முப்பத்தாறும் வைத்துக் கழிக்க வேண்டுமென்பர் நிராமய தேவர் முதலியோர். அது வருமாறு. அவர் நூலின்,

MAHAMAHOPADHYAYA
Dr. U. V. SWAMINATHA IYER LIBRARY

# திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடு

தருமபுர ஆதீனத்துக்குச் சொந்தமான மாயூரம் குமரக்கட்டளை ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானத்தில் கந்தசஷ்டித் திருநாளை முன்னிட்டு அவ்வாலயம் ஸ்ரீ குமாரவிலாஸ மண்டபத்தில் மாநாடு சிறப்பாக நடைபெற்றது. கீழ்க்காணுமாறு சொற்பொழிவுகள் நிகழ்ந்தன. 19—10—52-ல் சென்னை பன்மொழிப்புலவர், பல்கலைச் செல்வர், திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் M.A., B.L., M.O.L., "நால்வர் காட்டிய நல்வாழ்வு". கோவை நிர்மலா கல்லூரித் தமிழாசிரியை, வித்வான், ஸ்ரீமதி. சி. ந. குழந்தையம்மாள் அவர்கள் "திருவாசகமும் திருக்கோவையாரும்". 20—10—52-ல் தருமபுர ஆதீனக் கல்லூரித் தமிழ்ப்பேராசிரியர், வித்வான், திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியாரவர்கள் "கைவருந் தொண்டு", தருமபுர ஆதீனப் பாடசாலைத் தமிழாசிரியர், வித்வான், திரு. வை. திருஞானசம்பந்தம் அவர்கள் "காணுமிடமெல்லாம் கந்தன்". 21—10—52-ல் திருக்குவளை தேவஸ்தானம் கட்டளை விசாரணை, வித்வான். ஸ்ரீமத் மாணிக்கவாசகத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் "சுந்தரர் செந்தமிழ்", தருமபுர ஆதீனக் கல்லூரித் துணைத்தலைவர், வித்வான், திரு. ச. தண்டபாணி தேசிகர் அவர்கள் "சுந்தரர் சொல் நயம்", ஆதீனக் கல்லூரி வித்வான் வகுப்பு மாணவர், திரு. சொ. சிங்காரவேலன் "சேவலோன் சேவடி". 22—10—52-ல் நாகை நாஷனல் ஹைஸ்கூல் தமிழாசிரியர், வித்வான், திரு. வை மு. சண்முக தேசிகர் அவர்கள் "சைவமன்னர் மாண்பு". தருமபுர ஆதீனத் தமிழ்ப்புலவர், விரிவுரையரசு, பாலகவி, திரு. வே. இராமநாதன் செட்டியார் அவர்கள் "கச்சியப்பர் கவிநயம்". 23—10—52-ல் திரு. தொ. மு. பாஸ்கரத்தொண்டமான் அவர்கள் M.A., (டிப்டி கலெக்டர், ரெவினியூகோர்ட், குடந்தை) தலைமையில் திருச்சி, திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் "தமிழிலக்கியங்கள்", அண்ணாமலைப் பல்கலைக்கழகம், வித்வான், திரு. G. சுப்பிரமணியப் பிள்ளை அவர்கள் M.A., B.L., "குமரகுருபரர்". 24—10—52-ல் காஞ்சிபுரம் பச்சையப்பன் ஹைஸ்கூல் ஆசிரியர், திரு. க. வச்சிரவேல் முதலியார் அவர்கள் B.A., L.T., "திருமுருகனும் சாத்திர முடிபும்", சீகாழி தேவஸ்தானம் கட்டளை விசாரணை, வித்வான், ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் "ஞானத் தமிழ்", தருமபுர ஆதீனக் கல்லூரித் தமிழ்ப்பேராசிரியர், வித்வான், திரு. V. S. குருசாமி அவர்கள் "கரும்புங் கைத்ததே".

21—10—52ல் ஸ்ரீ மாயூரநாதசுவாமி தேவஸ்தானம் தேவார வகுப்பு மாணவ மாணவிகள் "தேவார இன்னிசை" அரங்கும், 23—10—52ல் தருமபுர ஆதீனக் கல்விநிலைய மாணவர்களின் "திருப்புகழ்" அரங்கும், 24—10—52ல் தருமபுர ஆதீனம் இலவச

இசைவகுப்பு இசையாசிரியர் [illegible]ணம், [illegible], திரு. P. சுவாமிநாதன் & பார்ட்டியாரால் "இன்னிசை" நிகழ்ச்சியும் நடைபெற்றன.

## கந்தசஷ்டிச் சொற்பொழிவுகள்

தருமபுர ஆதீனத்துக்குச் சொந்தமான **சீகாழி ஸ்ரீ சட்டைநாத சுவாமி தேவஸ்தானம்** திருஞானசம்பந்தர் ஆலய முன்மண்டபத்தில் கீழ்க்காணுமாறு அறிஞர் பலர் சொற்பொழிவு ஆற்றினுர்கள். 19—10—52ல் சீகாழி கட்டளைவிசாரணை வித்வான் ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் "கந்தர் கலிவெண்பா", 20—10—52ல் சீகாழி திரு. K. அரங்காசாரியார் அவர்கள் B.A., B.T. "திருமுருகாற்றுப்படை", 21—10—52ல் தருமபுரம் பல்கலைக் கல்லூரித் தமிழ்ப்பேராசிரியர் வித்வான் திரு. V. S. குருசாமி அவர்கள் "கந்தர் அலங்காரம்", 22—10—52ல் சீகாழி சபாநாயக முதலியார் உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியர் வித்வான் திரு. முருகையா தேசிகர் அவர்கள் "கந்தர் அநுபூதி", 23—10—52ல் லூதரன் மிஷன் உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியர் புலவர் திரு. அமிர்தகணேசன் அவர்கள் "பிள்ளைத்தமிழ்", 24—10—52ல் தருமபுரம் பல்கலைக் கல்லூரி வித்வான்வகுப்பு மாணவர் திரு. C. சிங்காரவேலன் "திருப்புகழ்".

தருமபுர ஆதீனத்துக்குச் சொந்தமான **வைத்தீஸ்வரன்கோயில் தேவஸ்தானம்** பிரசங்கசபா மண்டபத்தில் 23—10—52ல் பாலகவி திரு. வே. இராமநாதன் செட்டியார் அவர்கள் "பிள்ளைக்கவி" என்பதுபற்றியும், 24—10—52ல் வித்வான் திரு. G. சுப்பிரமணியபிள்ளை அவர்கள் M.A., B.L. "தமிழ்ப் பன்னீர்" என்பதுபற்றியும் சொற்பொழிவுகள் நிகழ்த்தினுர்கள்.

## ஏகதின லக்ஷார்ச்சனை

**தருமபுர ஆதீனம் ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி ஆலயத்தில்** உலக அமைதியுண்டாக, நாடு செழிப்புற ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமவர்கள் திருவுள்ளப்பாங்கின்படி, தருமபுர ஆதீனம் ஆதீன மடாலயத்தின் மேல்பால் திருக்கோயில் கொண்டு விளங்கும் ஸ்ரீ ஞானபுரீசுவரருக்கும் ஸ்ரீ ஞானம்பிகைக்கும் 30—10—52 குருவாரத்தன்று காலை 6-மணிமுதல் இரவு 10-மணிவரை ஏகதின லக்ஷார்ச்சனை மிகச்சிறப்பாக நடைபெற்றது.

Printed & Published by K. Sundaresa Iyer, Agent, Dharmapuram Adhinam at the Gnanasambandam Press, Dharmapuram, (Mayuram) 9—11—1952.